தமிழ்த் தேசியத்

# தமிழர் கண்ணோட்டம்

10 - 8 திருவள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை மே 1 - 15 2017 ரூ. 15/-

## இனவெறியோடு சேர்ந்த நிறவெறி
## தருண் விஜயின் தகிடுதித்தம் 06






## காவிரியோடு கரையும் சொற்கள் 08



## "ஏற்கெனவே சுட்ட தோசையை மறுபடியும் சுடுவது போன்றதே நீட் தேர்வு!"

பிரின்சு கசேந்திரபாபு செவ்வி! 10

## சென்னை இந்திப் பிரசார சபை முன்பாக

# இந்தித் திணிப்பு ஆணை எரிப்புப் போராட்டம்!

**இடம்: இந்திப் பிரச்சார சபை, தியாகராயர் நகர், சென்னை.**

**காலம்: தி.பி. 2048 - சித்திரை 25 (08.05.2017) திங்கள் காலை 10 மணி**

**தலைமை**

தோழர் **கி. வெங்கட்ராமன்** பொதுச் செயலாளர், தமிழ்த்தேசியப் பேரியக்கம்.

இந்தி மொழியைத் தமிழ்நாட்டின் கல்வி மொழியாக, பேச்சு மொழியாகத் திணித்திட பா.ச.க. அரசு சுனாமி வேகத்தில் செயல்படுகிறது. அதே வேகத்தில் தமிழைப் புறந்தள்ளி தீர்த்துக் கட்டவும் முயல்கிறது.

அண்மையில் பா.ச.க. அரசு கொண்டு வந்துள்ள சட்டத்தில், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் முதல் கட்டமாக நடுவண் பள்ளிக் கல்வி வாரிய (சி.பி.எஸ்.இ.) பள்ளிகளிலும், கேந்திரிய வித்தியாலயா பள்ளிகளிலும் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை இந்தி கட்டாய மொழிப் பாடமாக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. மாநில அரசுப் பள்ளிகளிலும் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை இந்தியைக் கட்டாயமாக்கிட, மாநில அரசுகளிடம் பேச்சு நடத்தப்படும் என்றும் நடுவண் அரசு கூறுகிறது.

நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர், தலைமை அமைச்சர், அமைச்சர்கள் இந்தி தெரிந்தால், இந்தியில் மட்டுமே பேச வேண்டும் என்றும் புதிய சட்டம் கூறுகிறது. அத்துடன் அவர்கள் நாடாளுமன்றத்திற்கு வெளியே இந்தியாவில் எங்கு பேசினாலும் இந்தி தெரிந்தோர் இந்தியில் மட்டுமே பொது நிகழ்வுகளில் பேச வேண்டும் என்றும் கூறுகிறது.

மேற்கண்ட புதிய ஆணைகள், கடந்த 2011ஆம் ஆண்டு (02.06.2011), நடுவண் அரசில் காங்கிரசு - தி.மு.க. கூட்டணி ஆட்சி நடந்த போது, உள்துறை அமைச்சராக இருந்த ப. சிதம்பரம் தலைமையில் இயங்கிய "அலுவல் மொழிக்கான நிலைக்குழு"வின் (Committee of Parliament on Official Language) பரிந்துரைகளே ஆகும். அப்பரிந்துரைகளை ஆறாண்டுகள் கழித்து இப்போதுள்ள பா.ச.க. அரசு ஏற்றுச் சட்டமாக்கியுள்ளது.

இந்திய அரசில் காங்கிரசு இருந்தாலும், பா.ச.க. இருந்தாலும், அது இந்தித் திணிப்பை தொடரும் என்பதற்கு இதுவே தக்க சான்றாகும்.

அசாம் தலைநகர் கவுகாத்தியில் 18.04.2017 அன்று நடந்த இந்தி பரப்பலுக்கான கூட்டுக் குழுக் கூட்டத்தில் பேசிய நடுவண் அமைச்சர் வெங்கையா நாயுடு, இந்தி பேசாத மாநிலங்களில் மக்கள் தங்களுக்கிடையே உரையாடும் பொழுதும் இந்தி மொழியில் பேசுமாறு வலியுறுத்தினார்.

இந்தித் திணிப்பு என்பது மொழி ஆதிக்கம் மட்டுமன்று; அது ஆரிய ஆதிக்கத்தின் இன்னொரு கூறு! தமிழினத்தை ஆரியம் எப்போதுமே பகையினமாகக் கருதும்!

தமிழ்நாட்டில் இந்தி கல்வி மொழியாகிவிட்டால், வடநாட்டவர்கள் இங்கு போட்டித் தேர்வுகள் எழுதி தமிழ்நாட்டின் அதிகார வர்க்கத்திலும், வேலை வாய்ப்பிலும் பேராதிக்கம் செலுத்துவார்கள். மண்ணின் மக்கள் வேலையற்ற அகதிகளாக வெளியே தள்ளப்படுவார்கள்!

இந்தி படித்தால் வடநாட்டில் வேலை கிடைக்கும் என்று பம்மாத்து செய்தார்கள்; இப்போதே வடநாட்டவர்கள் வந்துதான் தமிழ்நாட்ட்டின் வேலை வாய்ப்புகளைப் பறித்துக் கொண்டுள்ளார்கள். தமிழ்நாட்டில் இந்தி கல்வி மொழியாகிவிட்டால், தமிழர்களின் கதி என்னவாகும்?

தமிழ் மொழி காக்க - தமிழர் உரிமை காக்க - ஆதிக்க இந்தியை அடித்து விரட்ட வேண்டியது கட்டாயக் கடமையாகும். எனவேதான், ஆதிக்க இந்தியைத் தடுக்க இந்தித் திணிப்பு ஆணை எரிப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது!

**கோரிக்கைகள்**

1. மக்களவை மாநிலங்களவையில் முன் அனுமதி கேட்காமல், அமைச்சர்களும் உறுப்பினர்களும் தமிழில் பேசுவதற்கான உரிமையும் வாய்ப்பும் அளிக்கப்பட வேண்டும்.

2. நடுவண் பள்ளிக் கல்வி வாரிய (சி.பி.எஸ்.இ.) மற்றும் கேந்திரிய வித்தியாலயா பள்ளிகளில் இந்தியைக் கட்டாயமாக்குவதைக் கைவிட்டு, தமிழ்நாட்டில் அவற்றில் தமிழைக் கட்டாய மொழிப்பாடமாக்க வேண்டும்.

தமிழைக் கட்டாய மொழிப்பாடமாக ஏற்றுக் கொள்ளாத நடுவண் வாரிய மற்றும் கேந்திரிய வித்தியாலயா பள்ளிகளை நடத்த தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கக் கூடாது. அவற்றைக் மூடச் செய்ய வேண்டும்

வாருங்கள் தமிழர்களே!

## தமிழ்த்தேசியப் பேரியக்கம்

*21, முதல் தெரு, முதல் பிரிவு, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை-78.*

*பேச: 9840848594* | *முகநூல்:* fb.com/tamizhdesiyam | *இணையம்:* www.tamizhdesiyam.com

# தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்

ஆசிரியர் – வெளியீட்டாளர்

**பெ.மணியரசன்**

இணை ஆசிரியர்

**கி.வெங்கட்ராமன்**

ஆசிரியர் குழு உறுப்பினர்கள்

**கவிபாஸ்கர், க. அருணபாரதி, நா. வைகறை, அ. ஆனந்தன், பொன்னுசாமி, க. காந்திமதி, நா. இராசாரகுநாதன், ப. செம்பரிதி, கதிர்நிலவன்**

வடிவமைப்பு

**கவிபாஸ்கர்**

ஒளி அச்சு

**தமிழ்த் தேசிய வரைகலை, சென்னை - 17.**

அச்சாக்கம்

**பிரின்ட் பாஸ்ட், வேளச்சேரி, சென்னை - 42.**

**தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்**



21, முதல் தெரு, முதல் பிரிவு,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை -600 078.
தொலைப்பேசி : 044-24742911

மின்னஞ்சல்: tkannotam@gmail.com
tamizhdesiyam@gmail.com
இணையம்
http://tamizharkannotam.blogspot.com
http://www.kannotam.com


❖

**தமிழ்த்தேசியப் பேரியக்கம்**
இணையம்
http://tamizhdesiyam.com

❖

கீற்று இணையதளத்திலும் படிக்கலாம்
www.keetru.com

| | | |
|---|---|---|
| தனி இதழ் | ரூ | 15 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ | 350 |
| மூன்றாண்டுக் கட்டணம் | ரூ | 1000 |
| ஐந்தாண்டுக் கட்டணம் | ரூ | 1600 |
| பத்தாண்டுக் கட்டணம் | ரூ | 3000 |




**8 காவிரியோடு கரையும் சொற்கள்**
நக்கீரன்

இனவெறியோடு சேர்ந்த நிறவெறி!
தருண் விஜயின் தகிடுதித்தம்!
*– வெ. வெற்றிவேல் சந்திரசேகர்* .......... 6

ஏற்கெனவே சுட்ட தோசையை மறுபடியும்
சுடுவது போன்றதே நீட் தேர்வு!
*– கல்வியாளர் பிரின்சு கசேந்திரபாபு செவ்வி* .......... 10

நிகரன் விடைகள் .......... 16

வரலாறு அறிவோம்: தமிழவேள் த.வே. உமாமகேசுவரனார்
*– கதிர்நிலவன்* .......... 18

ஊர் உலகம்
*–இளந்தமிழன்* .......... 22

உரைகல்: மீத்தேன் அகதிகள்
*– நா.வைகறை* .......... 24

பா.ச.க. பாசிசமும் பக்கவாத்திய இந்தியத் தேசியமும்
– பெ.மணியரசன் .......... 26

பாவலர் முழுநிலவன் கவிதைகள் .......... 27

படிக்கட்டுகளாக திகழும் படிப்புகள் (1)
*– பேரா. இரா. கிருஷ்ணமூர்த்தி* .......... 28

காவிரித்தாய் காப்பு முற்றுகைப் போராட்டத்தில்
*– தமிழ்த் தேசியப் பேரியக்கத் தோழர்கள்* .......... 30

சென்னை இந்திப் பிரசாரசபை முன்பாக
இந்தித் திணிப்பு ஆணை எரிப்புப் போராட்டம்
*– த.தே.பே. தலைமைச்செயற்குழு தீர்மானம்* .......... 32

நிறை குறை .......... 34


உறுப்புக்கட்டணங்கள் (சந்தா), த.க. விற்பனைத் தொகை
ஆகியவற்றைக் கீழ்க்காணும் வங்கி முகவரியில் செலுத்தலாம்
**தமிழர் கண்ணோட்டம் அறக்கட்டளை,**
**இந்தியன் வங்கி,** தி.நகர், தெற்கு உஸ்மான் சாலை –கிளை
**சேமிப்புக் கணக்கு எண்: 6126971024**
IFSC CODE: IDIB000T115

ஆசிரியவுரை
தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்
மே 1 - 15 2017

# நீங்கள் எந்தப் பக்கம்?

அ.இ.அ.தி.மு.க. தலைமையகத்தில் சசிகலா, தினகரன் படங்கள் அகற்றப்பட்டன!

தேர்தல் ஆணைய அதிகாரிகளுக்குக் கையூட்டு கொடுக்க முயன்ற வழக்கில் தினகரன் தளைப்படுத்தப்பட்டு, திகார் சிறையில் அடைக்கப்பட்டார். விசாரணைக்காக அவரை வெளியில் எடுத்து, வேண்டு மென்றே இழிவுபடுத்தி, எங்கெங்கோ இழுத்துச் செல்கிறது தில்லி காவல்துறை!

அ.இ.அ.தி.மு.க.வினர் யாரும் இவற்றைக் கண்டிக்கவில்லை! அ.இஅ.தி.மு.க.வினரே கண்டிக்காத நிலையில் வெளியில் வேறு யார் கண்டிப்பார்கள்? ஒரு மாதத்திற்கு முன் "மாண்புமிகு சின்னம்மா"வின் காலில் விழுந்து, எழுந்து, மூச்சுக்கு மூச்சு "மாண்புமிகு சின்னம்மா"வின் புகழ் பாடிய அ.இ.அ.தி.மு.க. அமைச்சர்கள், இப்போது ஏன் அவரை இப்படி இழிவுபடுத்து கிறார்கள்?

துணைப் பொதுச்செயலாளர் தினகரன் காலடியைக் காவல் தெய்வத்தின் கருவறையாகக் கருதிய அ.இ. அ.தி.மு.க. அமைச்சர்கள் மற்றும் இரண்டாம் கட்ட அல்லது இரண்டுங்கெட்டான் தலைவர்கள், இப்போது தினகரனை அனாதையாக விட்டது ஏன்?

சொந்த ஆதாயத்திற்காக செயலலிதாவின் அடிமைகளாக, அடியாட்களாகச் செயல்பட்ட அமைச்சர்கள் உள்ளிட்ட அத்தனை பிரமுகர்களும், தங்களது அடியாள் அதிகாரத்தைத் தொடர, தாங்கள் கொள்ளையிட்டதைக் காத்துக் கொள்ள, மேலும் கொள்ளையைத் தொடர, செயலலிதா **"தரத்தில்"** ஒரு **"தாதா"**த் தலைவரை சின்னம்மாவிடம் அடையாளம் கண்டார்கள். அவர் ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டு சிறையில் அடைபடப் போன போது, தமது வாரிசாக, தம் அக்காள் மகன் தினகரனைத் துணைப் பொதுச்செயலாளர் ஆக்கிவிட்டுப் போனார்.

உடனே அ.தி.மு.க.வின் அமைச்சர்கள் உள்ளிட்ட ஆதாயக் கும்பல் தினகரனைத் தாள் பணிந்து தோள் சுமந்தது. ஊழல் கும்பலின் உற்பத்திதான் தினகரன்; எனவே எளிதில் மாட்டிக் கொண்டார்.

எங்காவது மாடு செத்தால், எலி செத்தால், கழுகுக்கு மூக்கு வேர்த்து விடுமாம்! பா.ச.க. என்ற தில்லிக் கழுகுக்கு செமையாக மூக்கு வேர்த்து விட்டது. அ.இ. அ.தி.மு.க.வைக் கொத்திக் குதறி, சின்னாபின்னப்படுத்துகிறது! இதில் அ.தி.மு.க.வை ஆதரிப்பதா? பா.ச.க. நடவடிக்கைகளை ஆதரிப்பதா என்ற குழப்பம் தமிழ்நாட்டில்!

அ.தி.மு.க. பெருச்சாளிகள் வேட்டையாடப்பட வேண்டியவையே என்று மனச்சான்று கூறுகிறது. மறுபக்கம் வேட்டையாடுபவை பா.ச.க. ஓநாய்கள் அல்லவா என்று அறிவு எச்சரிக்கின்றது! இப்படிப்பட்ட இக்கட்டுக்கும், சீரழிவுக்கும் தமிழ்நாட்டைக் கொண்டு வந்து – முச்சந்தியில் நிறுத்தியவர் செயலலிதா!

அறமற்ற, சனநாயகமற்ற, ஒற்றை எதேச்சாதிகாரத் தலைமை கொண்ட கட்சியாக அ.இ.அ.தி.மு.க.வை மாற்றினார் செயலலிதா! கையூட்டு வாங்குவதை நிரந்தர நிர்வாக ஏற்பாடாக்கினார். இப்படியாக அண்டிப் பிழைப்போரின் ஆராதனைத் தெய்வமாக செயலலிதா விளங்கினார்.

இனியாவது தமிழர்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் மீண்டும் கேவலப்படாமல் இருக்க வேண்டுமானால் செயலலிதா பாணி அரசியலை மறுக்கும் நேர்மையும் விழிப்புணர்ச்சியும் பெறவேண்டும்.

அப்படியென்றால் கருணாநிதி பாணி அரசியலை ஏற்க வேண்டுமா? கூடாது! செயலலிதாவின் மறைமுகக் குருநாதர் கருணாநிதிதான்! தமிழ்நாட்டின் எல்லாச் சீரழிவுகளின் தொடக்கமும் கருணாநிதியாகத்தான் இருப்பார்! கருணாநிதியின் விசுவரூபம்தான் செயலலிதா!

செயலலிதா – புடவை கட்டிய கருணாநிதி! கருணாநிதி – வேட்டி கட்டிய செயலலிதா! ஸ்டாலினோ வேட்டி – புடவை இரண்டையும் ஒரே நேரத்தில் கட்டிக் கொள்பவர்!

அ.இ.அ.தி.மு.க. – மற்றும் தி.மு.க. கட்சிகளுக்கு வெளியேதான், அவற்றின் துணை ஆற்றல்களாகச் செயல்படும் பல்வேறு கட்சிகளுக்கும் வெளியேதான் தமிழ் மக்கள் இன்று உரிமைப் போராட்டங்கள் நடத்தி வருகிறார்கள். இந்தியாவிலேயே அன்றாடம் மக்கள் போராட்டங்கள் அதிகம் நடைபெறுவது தமிழ்நாட்டில்தான்!

அந்த மக்களைப் பாருங்கள்! அதோ முன்னணிப் படைபோல் மாணவர்களும் இளைஞர்களும் மக்களுக்கு முன் செல்கிறார்களே, அவர்களைப் பாருங்கள்! நல்லோரே நாட்டோரே அவர்களைப் பார்த்து நம்பிக்கை கொள்ளுங்கள்! அந்தப் புதிய எழுச்சியிலிருந்து புதிய இலட்சிய அரசியலை வார்த்தெடுக்க முன் வாருங்கள்! செயலலிதா, கருணாநிதி காட்டிய பாதையை மட்டுமல்ல, அவர்கள் வெளிப்படுத்திய “பண்பாட் டையும்” மறுக்கப் பழகுங்கள்!

அவர்களை மறுப்பது, கடினமல்ல! இதோ சசிகலாவின் காலில் விழுந்தவர்கள், தினகரனைத் தோள் சுமந்தவர்கள் அவர்களை மறுக்கவில்லையா? அதன் அடுத்தகட்ட மன வளர்ச்சிதான், செயலலிதா – கருணாநிதி “அரசியலை” மறுப்பது!

செயலலிதா – கருணாநிதி அரசியலை மறுப்பதும், ஆரிய ஏகாதிபத்திய பா.ச.க. ஆக்கிரமிப்பை முறியடிப்பதும் ஒரே வேலைத் திட்டத்தின் இரு கூறுகள்! ஒரே அணிவகுப்பின் இரு முழக்கங்கள்!

தமிழ்த்தேசியப் பேரியக்கம் முன்வைக்கும், தமிழ்த் தேசியம் இதுதான்!

கும்பகோணம் டிகிரி காப்பிக் கடைபோல் தமிழ்த்தேசிய கடைகள் பல இருக்கின்றன! இவற்றை உற்று நோக்கி ஆராய்ந்து சரியான தமிழ்த்தேசிய அமைப்பைத் தேர்வு செய்வதே தமிழர்களின் புதிய வரலாற்றைப் படைக்கும்!

●

## இந்திய அரசு வஞ்சிக்கிறது! தமிழ்நாடு அரசு ஏமாற்றுகிறது!

வறட்சியால் தமிழ்நாட்டில் தற்கொலை செய்து கொண்ட உழவர்கள் குறித்த பொதுநல வழக்கில், 28.04.2017 அன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பதில் மனுவில் தமிழ்நாடு அரசு, வறட்சியால் சாகுபடி அழிந்ததைப் பார்த்து உழவர்கள் யாரும் தற்கொலை செய்து கொள்ளவில்லை என்றும் குடும்பச் சிக்கலால் ஒருசாரார் தற்கொலை செய்து கொண்டார்கள், மற்றவர்கள் பலவகை நோய்களால் உயிரிழந்தார்கள் என்றும் கூறியுள்ளது. இது முற்றிலும் மனித நேயமற்ற, உண்மைக்குப் புறம்பான, பொறுப்பற்ற பதில் மனுவாகும்!

காய்ந்து கருகிய பயிரைப் பார்த்து, மாரடைப்பு ஏற்பட்டு வயலில் இறந்தவர்கள் பலர்; பயிருக்கு அடிக்க வைத்திருந்த பூச்சி மருந்தைக் குடித்துத் தற்கொலை செய்து கொண்டோர் பலர். இந்த உண்மையை தமிழ்நாடு அரசு மறைக்க வேண்டிய தேவை என்ன?

மராட்டியம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் சாகுபடி பாதிக்கப்பட்டு தற்கொலை செய்து கொண்ட அல்லது மாரடைப்பால் இறந்து போன உழவர்களின் பட்டியலை அப்படியே பதிவு செய்து, நடுவண் அரசிடமிருந்து பெருமளவில் இழப்பீட்டுத் தொகை வாங்கியுள்ளார்கள். பொறுப்புள்ள அரசாக இருந்தால், தமிழ்நாடு அரசு அம்மாநிலங்கள் செய்ததைப் போல் நடுவண் அரசுக்குப் பட்டியல் அனுப்பி, சிறப்பு நிதி உதவி கோரியிருக்க வேண்டும்.

இறந்த உழவர்களின் எண்ணிக்கை சற்றொப்ப 300 இருக்கும்போது, வெறும் 82 பேர் என்று குறைத்துக் கணக்குக் காட்டியது ஏன்?

கர்நாடகம் காவிரித் தண்ணீர் தரவில்லை என்று கூறிய தமிழ்நாடு அரசு, காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க மறுத்துத் தமிழ்நாட்டைப் பழிவாங்கிய நடுவண் அரசை பதில் மனுவில் சுட்டிக் காட்டாதது ஏன்?

மேலாண்மை வாரியம் அமைக்க ஆணையிடும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்கு இல்லை என்ற மோடி அரசின் வாதத்தை உரியவாறு மறுத்து, உச்ச நீதிமன்றத்திற்கு அந்த அதிகாரம் உண்டு என்று 9.12.2016 தீர்ப்பில் உறுதி செய்த உச்ச நீதிமன்றம், இதுவரை காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க புதிய ஆணை பிறப்பிக்காததும் தமிழ்நாட்டு வறட்சிக்கான காரணம் என்று பதில் மனுவில் தமிழ்நாடு அரசு கூறியிருக்க வேண்டும்.

வறட்சித் துயர் நீக்க நிதியாக 39,565 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசு கேட்டதில், வெறும் 1748 கோடி ரூபாய் தான் இந்திய அரசு தந்தது. எனவே, தமிழ்நாட்டில் வறட்சித் துயர் துடைப்புப் பணிகளை உரியவாறு செய்ய முடியவில்லை எனத் தமிழ்நாடு அரசு பதில் மனுவில் சுட்டிக் காட்டியிருந்தால், தமிழ்நாடு அரசுக்கு மக்கள் மீதுள்ள அக்கறை வெளிப்பட்டிருக்கும்.

ஆனால், எல்லாம் சிறப்பாக நடப்பதுபோல் வறட்சி நிவாரணப் பணிச் சாதனைகளை அதில் கூறியிருப்பது, தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றும் செயலாகும்.

எனவே தமிழ்நாட்டு மக்களும், உழவர்களும் தங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்ளவும், வாழ்வுரிமையைத் தக்க வைத்துக் கொள்ளவும் இந்திய அரசையும், தமிழ்நாடு அரசையும் சேர்த்தே எதிர்த்துப் போராட வேண்டிய தேவையுள்ளது.

●



# இனவெறியோடு சேர்ந்த நிறவெறி!

# தருண் விஜயின் தகிடுதித்தம்!

பா.ச.க. மேலவை உறுப்பினர் தருண் விஜய், தமிழ்மொழி, திருக்குறள், திருவள்ளுவர் பற்றி பெருமையாக அவ்வப்போது பேசி வருபவர். அவரது தமிழ்ப் பற்றில் புல்லரித்துப் போன வைரமுத்து போன்றவர்கள் அவரை தமிழ்நாட்டுக்கு அழைத்து பாராட்டுவிழா நடத்தி புளகாங்கிதம் அடைந்தனர்.

தருண் விஜய் பா.ச.க.வின் ஊது குழலாக செயல்படுபவர்; காவி அலை (Saffron surge) என்ற ஆங்கில பத்திரிகையின் ஆசிரியராக இருக்கிறார். அதற்கு முன்பு ஆர்.எஸ்.எஸ். ஏட்டின் ஆசிரியராக பல்லாண்டு காலம் பணியாற்றினார். பா.ச.க.வின் மதவாத கருத்துகளை தீவிரமாக ஆதரித்தும் அபாயகரமான இந்துத்துவ கருத்துகளை ஏற்றும் பரப்பியும் வருபவர்.

இந்த பின்புலத்தில் இருந்து வரும் தருண் விஜயின் தமிழ் மீதான பற்று ஒரு போலி நாடகம் என்றும், தமிழ்நாட்டில் காலூன்றத் துடிக்கும் பா.ச.க.வின் அரசியல் சித்து விளையாட்டுகளில் ஒன்று என்றும் திறனாய்வு செய்ததை, அப்போது யாரும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. தருண் விஜய் மீதான திறனாய்வுகளை “இனவாதம்“ என்று இடித்துரைத்தவர் களும் உண்டு!

நொய்டாவில் நைஜீரியர்கள் மீது அண்மையில் தாக்குதல் நடத்தப்பட்டது. “இந்தியர்களின் இனவெறித் தாக்குதல்“ என ஊடகங்கள் இந்த நிகழ்வை தலைப்பாக்கி வெளியிட சிக்கல் பூதாகரமானது. இதற்குப் பதில் அளித்த பா.ச.க.வின் நடுவண் அமைச்சர் சுஷ்மா சுவராஜ், “இந்தியர்கள் இனவெறியர்கள் அல்ல“ என்று சப்பைக்கட்டு கட்டினார்.

அதற்கு மறுநாள் நைஜீரியர்கள் தாக்குதல் குறித்து தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்த தருண் விஜய், “இந்தியர்களை இனவெறியர்கள் என்று கூறுவதில் நியாயமில்லை. நாங்கள் இனவெறியர் களாக இருந்தால், கறுப்பர்களான தென்னிந்தியர்களுடன் எப்படி இணைந்து வாழ்வோம்? தமிழகம், கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திராவில் கறுப்பர்கள்

**வெ. வெற்றிவேல் சந்திரசேகர்**

நிறைந்துள்ளனர்” என்று கூறிய தருண் விஜய், “எங்களை சுற்றி கறுப்பர்கள் இருந்தாலும் அவர்களுடன் இணக்கமாக வாழ்ந்து வருகிறோம்” என்று கருத்து தெரிவித்தார். இனவெறிக்கு எதிராக பேசுவதாக பா.ச.க. வின் இனவெறியை தோலுரித்துக் காட்டி விட்டார்!

இதற்கு முன்பே மலையாள நடிகர் செயராம், தன் வீட்டில் வேலை பார்த்த தமிழச்சியை “கருப்பு நிற தடித்தத் தோலுடையவர்” என்று பேசியது நினைவிருக் கலாம். இப்பொழுது, தருண் விஜய் அதே போல பேசியிருப்பது, தமிழ்நாட்டுக்கு வெளியே தமிழர்கள் குறித்து இப்படித்தான் சித்திரம் தீட்டப்பட்டுள்ளது என்பதையே காட்டுகிறது!

இவர்தான் இத்தனை ஆண்டுகளாக திருவள்ளுவர், தமிழ் என்று ஏமாற்றி வந்துள்ளார். நிறவெறி கருத்தின் மூலம், தருண் விஜயின் முகத்திரை கிழிந்து தொங்கி விட்டது.

கருப்பு நிறத் தமிழர்கள் மற்றும் தென்னிந்தியர் களோடு வாழ்வது ஏதோ அவர்களின் பெருந்தன்மை போல நிறவெறியோடு தருண் விஜய் பேசியிருக்கிறார்.

தமிழர்கள் உள்ளிட்ட பிற தென்னிந்திய மாநிலத் தவர்களின் கடும் எதிர்ப்பை அடுத்து தருண் விஜய் தன் பேச்சுக்கு வருத்தம் தெரிவித்து விட்டார்.

பா.ச.க.வின் சுப்பிரமணிய சாமி தமிழர்கள் “பொறுக்கீஸ்“ என்கிறார். தமிழ்நாட்டில் உள்ள பா.ச.க. வின் எச். இராசா, தமிழர்களை “தேச விரோதிகள்” என்கிறார். பா.ச.க. நாடாளுமன்ற உறுப்பினரும் நடுவண் அமைச்சருமான பொன். இராதாகிருட்டி ணன் தமிழர்கள் தங்கள் முகத்தில் தாரைப் பூசிக் கொள்ளுங்கள் என்றார். இப்போது தருண் விஜய் கருப்பர்கள் என்கிறார்.

தருண் விஜயின் கருத்துக்கு தமிழ்நாட்டின் பா.ச.க. தலைவர்கள் தமிழிசையும் பொன் இராதாகிருட்டி

> **“வெள்ளையர்கள் ஆளப் பிறந்தவர்கள்; கருப்பர்கள் அடிமைகளாக வாழப் பிறந்தவர்கள் என்ற கொள்கையை பூடகமாகக் கொண்டே, பா.ச.க. இந்துத்துவா மற்றும் இந்தியத்தேசிய வெறி ஆகிய இரண்டும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.”**



தருண் விஜயின் கருத்துக்கு தென்னிந்தியா முழுவதும் குறிப்பாக தமிழ்நாட்டில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்தியாவைச் சேர்ந்த பா.ச.க. தலைவர்கள் யாரும் தருண் விஜயின் கருத்தைக் கண்டிக்கவில்லை.

தருண் விஜயின் கருத்தை நாம் ஏன் எதிர்க்க வேண்டும்? நம்முடைய நிறம் பற்றிய தாழ்வுமனப் பான்மை நமக்கில்லை. கருப்பு நிறத்தை இழிவாக சித்தரிக்கும் அழகு சாதன பொருட்களின் விளம் பரங்களை கடுமையாக எதிர்ப்பவர்கள் நாம்.

அதே நேரத்தில தமிழர்கள் உள்ளிட்ட தென் மாநில மக்களை பா.ச.க. தலைவர்கள் மற்றும் வட நாட்டு அரசியல்வாதிகள் எந்த நோக்கில் பார்க் கிறார்கள் என்று இந்தச் சிக்கல் வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது. அவர்களது மனத்தில் தமிழர்கள் உள் ளிட்ட “தென்னிந்தியர்கள்“ பற்றிய தாழ்வான எண்ணம் இருப்பதைத்தான் இது காட்டுகிறது.

ணனும் கண்டனம் தெரிவிக்காத நிலையில், அவர்கள் “சோற்றில் உப்பிட்டுத்தான் சாப்பிடுகிறார்களா?“ என்று சமூக வலைத்தளங்களில் பலரும் ஐயம் எழுப்பி னார்கள்.

“பொறுக்கீஸ்” என்றார்கள், “முகத்தில் தார் பூசிக் கொள்ளுங்கள்’’ என்றார்கள், “தேசவிரோதிகள்“ என்றார்கள். “கருப்பர்கள் தாழ்ந்தவர்கள்“ என்றார்கள். இன்னும் என்னென்ன சொல்லப் போகிறார்களோ? அதையெல்லாம் வெறும் வேடிக்கை மட்டும் பார்த்துக் கொண்டு இருக்கப் போகிறோமா?

“வெள்ளையர்கள் ஆளப் பிறந்தவர்கள்; கருப்பர்கள் அடிமைகளாக வாழப் பிறந்தவர்கள்“ என்ற கொள்கையை பூடகமாகக் கொண்டே, பா.ச.க. இந்துத்துவா மற்றும் இந்தியத்தேசிய வெறி ஆகிய இரண்டும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

நமது நிறம் கருப்பு. நமது இனம் தமிழ் இனம். நம்மை அடிமையாக்க நினைக்கும் “காவி இந்தியா“வை புறக்கணிக்க போகிறோமா இல்லையா?



நக்கீரன்

சுற்றுச்சூழலின் அழிவைப் பேசி உலகெங்கும் பெரும் அதிர்வை ஏற்படுத்திய ஒரு நூல் ரேச்சல் கார்சன் எழுதிய 'ஒலிக்காத இளவேனில்' (Silent Spring). உயிர்கொல்லிகளால் பல உயிரினங்கள் அழிந்துப் போனதைச் சான்றுகளுடன் விளக்கிய நூல் இது. ஓர் உயிரினத்தின் அழிவென்பது ஒரு மொழியில் அதற்குரிய பெயர்ச் சொல்லின் அழிவும் கூட.

மேலும் அவ்வுயிருடன் தொடர்புடைய பிற சொற்களும் அதனுடன் இணைந்து அழியும். இதனால்தான் இந்நூலைப் படித்து முடித்ததும் புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளரான ஆல்டஸ் ஹக்ஸ்லே இவ்வாறு சொன்னாராம்: "ஆங்கிலக் கவிதையின் பொருள் வளத்தில் பாதியை இழந்துக்கொண்டு வருகிறோம்." நம் தமிழ் மொழிக்கும் இதே நிலைதான் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

தமிழகத்தின் சுற்றுச்சூழல் அழிகையில் அதனுடன் சேர்ந்து தமிழ் சொற்களும் அழிகின்றன. கேட்பதற்கு அதிர்ச்சியாக இருந்தாலும் இதுதான் உண்மை. அந்தளவுக்கு ஒரு மொழியின் சொற்களும் சுற்றுச் சூழலும் பின்னிப் பிணைந்தவை. ஓர் அகராதியின் துணைக்கொண்டு எவ்வளவு இழந்திருக்கிறோம் என ஆய்வு செய்ய வேண்டிய அபாயக் கட்டத்தில் நாம் வாழ்கிறோம்.

# காவிரியோடு கரையும் சொற்கள்

காவிரி என்கிற சொல்லை முன்வைத்து இதனைக் காண்போம். ‘வான் பொய்யினும் தான் பொய்யா காவிரி’ என்கிற சொற்றொடரே இன்று பொய்த்த நிலை. நீர்வரத்துக் குறைந்து காவிரிச்சூழல் அழிந்து வரும் நிலையில் காவிரிப் படுகை மாவட்ட மக்களின் புழக்கத்திலிருந்து மறைந்துவிட்ட, மறைந்து கொண்டிருக்கும் சொற்களைக் காண்போம்.

ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் என்று பேசிய காவிரிப்படுகை இன்று ஆற்றோடு சேர்த்து சொற்களையும் தொலைத்து நிற்கிறது. ஆற்றின் நீர்வளத்தைப் போற்றும் வகையில் காவிரி முழுக்கக் கொண்டாடப்படும் திருநாள் பதினெட்டாம் பெருக்கு எனப்படும் ஆடிப்பெருக்கு. ஆற்றில் கொண்டா டப்பட்ட இத்திருநாள் இன்று குழாயடியில் கொண்டாடப்படும் அவலம். இத்திருநாள் காணாமல் போனதால் இதன் வழிபாடு தொடர் புடைய பொருட்களின் சொற்கள் சிவப்பு காதோலை, கருப்பு வளையல் சிறுவர்கள் உருட்டும் சப்பரத்தட்டி. ஆகியவையும் அருகி வருகின்றன.

‘ஆனி பிறந்துவிட்டால் ஆறு கரை புரளும்; ஆறெல்லாம் மீன் புரளும்’ என்கிற பழமொழியே இன்று இறந்துவிட்டது. படுகை மாவட்ட நன்செய் வேளாண்மை குறுவை, சம்பா, தாளடி என மூவகைப்படும். மேட்டூரில் இருந்து ஆனி மாதத்தில் நீர் திறந்ததும் மேற்கொள்ளப்படும் சாகுபடியே குறுவை. குறுகிய காலச் சாகுபடி யான இது அறுவடையானதும் அடுத்து தாளடி தொடங்கும். இவை இரண்டுக்கும் இடையில் ஏறக்குறைய ஐப்பசி மாதம் தொடங்கும் சாகுபடி சம்பா. இன்று ஆனியில் தொடங்கும் குறுவை சாகுபடியே பெரும்பாலும் ஒழிந்துவிட்டது. குறுவையே இல்லையெனில் தாளடி ஏது? விரைவில் சம்பா என்கிற சொல் மட்டுமே எஞ்சும். நடப்பு ஆண்டில் இதற்கும் ஆபத்து ஏற்பட்டுவிட்டது.

பட்டக்கால் என்பது மண்வளம் கருதி கோடையில் தரிசாக விடப் பட்ட வயல். இன்று வீட்டுமனை விற்பனைக்காகத் தரிசு எனும் பெயர் பெற்றுவிட்டது. ஆற்றில் நீர் வந்ததும் வயலுக்குப் பாய்ச்சும் முதல் தண்ணீர் வெங்கார். அதுபோல் வெங்கார் பாய்ச்சிய வயலில் மண் மென்மையாய் மாறுதலைக் குறிப்பது பூங்கார். (ஒரு நெல்லுக்கும் இப்பெயருண்டு).

டிராக்டர் வந்தபோதே பொன்னேர் காணாமல் போய்விட்டது. கலப்பை உழுத தடமான உழுதசால் டிராக்டருக்கு பின்னே கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருக்கிறது. படுகை மாவட்டங்களில் சேற்று உழவுக் கென்று பெயர் பெற்ற உம்பளாச்சேரி மாடுகளுக்கு மொட்டைமாடு என்று பெயர். மாடுகளின் கொம்பைத் தீய்த்து பயன்படுத்துவதால் இப்பெயர்.

வெள்ளைநிற முடிகளைக் கொண்ட இதன் வாலுக்கு வெடுவால் என்று பெயர். முன்பு யாராவது சுறுசுறுப்பாய் வேலை செய்தால் சுள்ளாப்பா வேலை செய்யறான் என்பார்கள். சுள்ளாப்பு என்ற இச்சொல் அதட்டி விரட்ட தேவையில்லாமல் தானாகவே சுறுசுறுப் பாக வேலைச் செய்யும் மாட்டிலிருந்து பிறந்தவையாகும்.

இன்று தனித்தனியாய் நாற்றங்கால் விடப் பாசனநீர் வசதி போதவில்லை. எனவே அவ்விடத்தை நாற்று நடும் இயந்திரங்கள் பிடித்து வருகின்றன. இதனால் இழக்கப்படும் சொற்கள் இவை. நாற்றங்கால் நாற்று விடும் இடம். பறியங்கால் நாற்று பறித்த இடம். நாற்றங்காலை சுற்றி தண்ணீர் வழிந்து ஓடுவதற்கு ஒரு கருங்கல்லில் துளையிட்டு இழுப்பர். இதற்குத் தோண்டிக்கால் என்று பெயர்.



**“காவிரி முழுக்கக் கொண்டாடப் படும் திருநாள் பதினெட்டாம் பெருக்கு எனப்படும் ஆடிப்பெருக்கு. ஆற்றில் கொண்டாடப்பட்ட இத்திருநாள் இன்று குழாயடியில் கொண்டாடப்படும் அவலம். இத்திருநாள் காணாமல் போனதால் இதன் வழிபாடு தொடர்புடைய பொருட்களின் சொற்கள் சிவப்பு காதோலை, கருப்பு வளையல் சிறுவர்கள் உருட்டும் சப்பரத்தட்டி. ஆகியவையும் அருகி வருகின்றன.”**



நாற்று பறித்தலிலும் நிறையச் சொற்கள் இருந்தன. கை நிறையும் வரை நாற்று பறித்தால் அது ஒரு பிடி. இரண்டு பிடி நாற்று சேர்ந்தால் ஒரு முடி. ஐந்து முடி நாற்று ஒரு கை. இரண்டு கை சேர்ந்தால் ஒரு குப்பை. பத்துக் குப்பை சேர்ந்தால் ஒரு கட்டு. நாற்றை நடும் இடைவெளிக்கும் ஒரு பெயருண்டு. கட்டை விரலையும் ஆட்காட்டி விரலையும் முடிந்தவரை விலக்கி பிடித்தால் ஏற்படும் இடைவெளிக்கு ஒட்டை என்று பெயர். அதுபோல் ஒரு நாற்று முடியிலிருந்து மூன்று நான்கு நாற்றுகளைக் கிள்ளி வயலில் நடுவர். இப்படி நட்ட நாற்றின் பெயர் முதல். இத்தனை சொற்களும் இனி இழப்புதான்.

இங்கு வாழ்ந்த பல உயிரினங்களே அழிந்துவிட்ட நிலையில் அதன் பெயர்ச் சொற்களும் அழிந்துவிட்டன. உடனடி எடுத்துக்காட்டு, பச்சைத்தவளை. இது இன்று படுகை மாவட்டங்களில் இல்லை. இதுபோல் உளுவை மீன்கள். இதன் தடமே காணோம். சாணிக்கெண்டை இன்று நினைவில் மட்டும். கார்த்திகை மாத ஆற்றில் கரையோரமாக நாங்கள் வெறும் கைகளாலேயே பிடித்துக் குவித்த சார்முட்டி என்கிற பொடி மீன்வகைகள் இன்று எங்கே போனது? இச்சிறிய மீன்களை மூக்கையும் வாலையும் கிள்ளிவிட்டுச் சட்டியில் கொட்டி கண்ணுக்குப் புலப்படாத செல்களைக் கஞ்சி போல் திரண்டு வருமாறு அளஞ்சி எடுப்பர். சார்முட்டியோடு இந்தச் சொல்லும் போய்விட்டது.

இதுபோல் வாய்க்கால்களிலும் குளத்திலும் மீன் பிடிக்க மூங்கில் சிம்புகளால் ஆன ஊத்தா எனும் பொறிப் பயன்பட்டது. இதற்குள் சாணி உருண்டையை வைத்துவிட்டு சென்று திரும்பி மாட்டியிருக்கும் மீன்களைப் பிடிப்பர். சில இடங்களில் கூந்தாளி என்ற பெயரும் இருந்தது. ஐப்பசி கடைசியிலிருந்து கார்த்திகை கடைசி வரைக்கும் 'கார்த்திகை வாளை' என்கிற மீன் கிடைக்கும். இத்தனை ஆயிரம் ஆண்டுகளில் இந்த ஆண்டுதான் காவிரியில் ஐப்பசி மாதத்தில் தண்ணீரே ஓடாத ஆண்டாகப் பதிவாகியிருக்கிறது. இதில் கார்த்திகை வாளையை இனி எங்கே தேடுவது?

இனி அறுவடைக் காலம். வைக்கோல் முதன்மையான உபரிப் பொருளாக இருந்த காலம் போய் விட்டதால் அறுவடை இயந்திரம் அறுத்துப் போட்ட வைக்கோலை காவிரிப்படுகை மாவட்ட மாடுகள் பல இன்றும் தின்னுவதில்லை. அவற்றைப் பொறுத்தவரை அவை வைக்கோலே அல்ல கூளம்.

வைக்கோல் கையால் அறுவடை செய்யப்பட்ட போது சில சொற்கள் வழக்கிலிருந்தன. மூன்று பிடி அறுத்து போட்டால் ஒரு அரி. இரண்டு மூன்று அரிகளைச் சேர்த்தால் ஒரு கோட்டு. சுமக்கும் அளவுக்குக் கோட்டுகளைத் தலைப்பு மாற்றி அடுக்கினால் அது ஒரு கட்டு. இன்று கட்டு மட்டுமே எஞ்சுகிறது. இதையே விதை நெல்லைக் கட்டிய கோட்டை என்கிற சொல்லும் வழக்கொழிந்து விட்டது. அறுவடை திருநாளான பொங்கல் திருநாளின் வடிவம் குலைந்துவிட்டதால் கூடவே நெட்டிமாலை, பதனிப்பொங்கல் உள்ளிட்ட பல சொற்களும் உதிர்ந்துவிட்டன.

அக்காலக் காவிரி கோடையில் முற்றிலும் வறண்டு போகாது. ஓரத்தில் சிறுவர்கள் குளிக்கும் அளவுக்கு நீர் ஓடும். அப்போது ஆற்றின் நடுவில் சில இடங்களில் மண் மேடுகள் இருக்கும் அதற்கு எக்கல் எனப் பெயர். நீரோட்டம் நின்ற பகுதியில் ஆற்று மணலில் அலைகளின் சிறு சுவடுகள் படிந்திருக்கும். இதற்கு மணல் கொழி எனப் பெயர். இதே வடிவத்தில் வானில் மழை ஓய்ந்ததற்கு அறிகுறியாகச் சிறு சிறு அலைகளாக முகில்கள் உறைந்திருக்கும் அதை வானம் மணல் கொழித்திருக்கிறது என்பர். என்னவொரு இயற்கை ஒப்பீடு!

தூவாளி எனப்படும் தவிடு போல மெத்தென்று படிந்திருக்கும் ஆற்றுமணலை சிறுவர்களாக இருக்கும் போது நீரோடு கலந்தள்ளி துளித்துளிகளாகச் சொட்டி கடல்மல்லை கோவில் வடிவத்தில் உருவாக்குவோம். கருமணல் கலந்து அவ்வளவு அழகாக இருக்கும் அவை.

தண்ணீர்த் தாகம் எடுத்தால் ஆற்றிலோடும் நீரைப் பருகமாட்டோம். பரபரவென்று மணலில் ஓரடி குழித் தோண்டினாலே ஊற்றுநீர் பொங்கும் தெளியவிட்டு குடிப்போம். இப்படி ஊற்று நீரையள்ளிச் சேந்தி செல்ல ஊற்றுவட்டா என்ற பாத்திரமே அப்போதிருந்தது. அதுபோல் ஊருக்கு பொதுவாக ஆற்றில் ஒரு ஊற்றுக் கிணறு இருந்தது. செங்கல் கட்டுமானத்தில் கோடையில் மணல் மூடியிருக்கும் இதை நான்கடி அளவுக்கே தோண்டுவர். குடம் குடமாய் நீர் ஊறிவிடும்.

ஆற்றோரத்தில் கிணறு தோண்டி ஊற்று நீரெடுத்துக் கரையோரத்திலிருந்த காய்கறி தோட்டத்துக்கு ஏற்றம் கொண்டு நீர் பாய்ச்சும் முறையும் சிலவிடங்களில் இருந்தது. இவ்வகைக் கிணற்றுக்குத் துலவாக்குழி என்று பெயர். இத்துடன் சால் உள்ளிட்ட ஏற்றம் தொடர்புடைய அத்தனை சொற்களையும் மணற் கொள்ளையர்கள் கொள்ள யடித்து விட்டனர்.

காவிரிக் கிளையாற்றின் கடைமடைப் பகுதிகளில் தண்ணீர் வடியாமல் தேங்கி நின்ற காலம் ஒன்றுண்டு. குளம் போன்ற அப்பகுதியில் உயரவகை நெல் சாகுபடி நடந்தது. இதற்குக் கோட்டகம் என்பர் அப்பகுதி மக்கள். இதுபோல் தலைஞாயிறு பகுதியில் உள்ள அளம் என்கிற உவர்நீர் ஏரியில் நட்ட நெல்லைப் படகில் சென்று அறுவடை செய்வர். காவிரிக்கரை இதனால்தான் புனல்நாடு என்று பெயர் பெற்றிருந்தது.

இத்தனை சூழலையும் கெடவைத்து இதை அனல்நாடாக மாற்ற மீத்தேன் திட்டம் வருகிறது. அக்கெடுநிலை நேர்ந்தால் நம் மொழியின் சொற்கள் மட்டுமல்ல நாமும் சேர்ந்தே தொலைவோம். ●

# “ஏற்கெனவே சுட்ட தோசையை மறுபடியும் சுடுவது போன்றதே நீட் தேர்வு!”

## கல்வியாளர் பிரின்சு கசேந்திரபாபு செவ்வி!



தமிழ்நாட்டின் கல்விச் சூழலை உயர்த்துவதற்கான போராட்டக்களங்கள் அனைத்திலும் முன்னணியில் நின்று வாதிட்டுக் கொண்டிருப்பவர், **பிரின்சு கசேந்திரபாபு** அவர்கள்! அரசுப் பள்ளிகளின் தரம் உயர்த்தல், கொள்ளை இலாபத்திற்கென தொடங்கப்பட்ட தனியார் பள்ளிகளின் அடாவடிகளை எதிர்த்தல் தொடங்கி புதிய கல்விக் கொள்கை - நீட் தேர்வு என கல்வித் தளத்தில் நடைபெற்று வரும் தாக்குதல்களுக்கு எதிராக, மக்களைத் திரட்டிப் போராடி வருபவர். பொதுப்பள்ளிக்கான மாநில மேடை அமைப்பின் பொதுச்செயலாளர். நீட் எதிர்ப்புக்காக பல்வேறு அரசியல் கட்சிகளையும், அறிவுத் துறையினரையும் தேடிப்பிடித்து சந்தித்துக் கொண்டிருந்தவரை, தமிழர் கண்ணோட்டம் இதழ் செவ்விக்காக நாம் தேடிப் பிடித்தோம். இனி அவருடன்...

*த.க. :* எப்படி பொதுவாழ்விற்கு வந்தீர்கள் ?

***பிரின்சு :*** 1980களில் மேனிலைப் பள்ளிக் கல்விக்காக, வடசென்னை கொருக்குப்பேட்டையில் அமைந்துள்ள தியாகராயர் கல்லூரி மேனிலைப் பள்ளியில் சேர்ந்ததுதான் என் வாழ்க்கையின் திருப்பு முனை! அப்பகுதி உழைக்கும் மக்களுடன் நேரடியான கள அனுபவம் கிடைத்தது. நிர்வாகம் ஆசிரியர்களை பழி வாங்குவதை எதிர்த்தும், விளையாட்டுத் திடலை விற்க முற்படுவதைத் தடுக்கவும் நடந்த மூன்று மாத போராட்டம் என்னை இடதுசாரி இயக்கத்திற்குள் கொண்டு வந்தது.

அனைத்திந்திய மாணவர் பெருமன்றம், இந்திய மாணவர் சங்கம் என இரண்டு அமைப்புடனும் இணைந்து போராடினோம். இறுதியாக இந்திய மாணவர் சங்கத்தில் முழுமையாக

ஈடுபடுத்திக் கொண்டேன். அதன் தொடர்ச்சி 1996 முதல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினராக பொறுப்பு வகித்து வருகிறேன்.

*த.க. :* **எப்பொழுது கல்வித்துறைச் செயல்பாடு களில் தீவிரமானீர்கள்?**

***பிரின்சு :*** கடந்த 2002ஆம் ஆண்டு, டி.எம்.ஏ. பாய் வழக்குத் தீர்ப்பிற்கு பிறகு, கல்வி பரவலாக்கப்படுவதற்கு பதிலாக பணம் படைத்தவருக்கு மட்டுமே கல்வி என்ற புதிய நிலை உருவானது. தமிழ்நாட்டில் மெட்ரிக் பள்ளி மோகம், அரசுப்பள்ளியில் பயில்பவர்களை ஏளனமாகப் பார்க்கும் நிலையை உருவாக்கியது. இச்சூழலில் கல்வித் தளத்தில் தொடந்து இயங்க கல்விக்கான ஒரு அமைப்பு தேவை என உணர்ந்தேன்.

நீண்ட விவாதத்திற்கும் முயற்சிக்குப் பின், ஒத்த கருத் துடைய கல்வியாளர்கள், கல்வியியல் செயல்பட்டாளர் கள் இணைந்து “பொதுப்பள்ளிக்கான மாநில மேடை“ என்ற அமைப்பை 2007ஆம் ஆண்டு உருவாக்கினோம். அதற்கென www.samacheerkalvi.in என்ற வலை தளத்தை உருவாக்கிச் செயல்பட்டு வருகின்றோம்.

*த.க. :* **தமிழ்நாட்டில் சமச்சீர்க்கல்வி கொண்டு வரப்பட நீங்கள் கடுமையாக உழைத்தீர்களே.. அதன் நிலை இப்போது, எப்படி இருக்கிறது?**

***பிரின்சு :*** தமிழ்நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி, தனியார் பள்ளிகள் சமச்சீர் கல்வியை இரத்து செய்ய வைத்த போது வீதியிலும் நீதிமன்றத்திலும் போராட் டத்தைத் தொடர்ந்தோம். தன்னெழுச்சியாகத் தமிழகம் முழுக்க போராட்டம் நடந்து, நீதிமன்றத்தில் வலுவாக வழக்கை முன் வைத்தோம். உச்ச நீதிமன்றத்தில் வழக்காடும் போது பலர் வழக்கு தொடுத்திருந்தாலும் இணைந்து செயல்பட்டோம். ஒன்றுபட்ட செயல்பாடு தான் வெற்றியைத் தந்தது. அப்படிப் போராடிப் பெற்ற “சமச்சீர் கல்வி“ வெறும் பொதுப் பாடத்திட்டம் அறிமுகத்தோடு நின்று போனது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. இருப்பினும் அதை ஒரு படி முன்னேற்ற மாகத்தான் பார்க்கிறோம்.

*த.க. :* **மோடி அரசின் புதிய கல்விக் கொள்கை யால் என்னென்ன பாதிப்புகள் நிகழக்கூடும் ?**

***பிரின்சு :*** பா.ச.க. நரேந்திர மோடி அரசால் முன் வைக்கப்பட்டுள்ள ‘புதிய கல்விக் கொள்கை’ என்பது, மாணவர்களைப் படிக்க வைப்பதற்கான கல்விக் கொள்கை அல்ல! கல்வி பயில்வதிலிருந்து ஒவ்வொரு வரையும் வடிகட்டி வெளியேற்றும் நோக்கத்துடனேயே இது உருவாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்களை மதிப்பெண் உள்ளிட்ட வெவ்வெறு அளவுகோல்களின் வழியே தனித்தனியாய்ப் பிரித்து, அவர்களை குழந்தைப் பருவத்திலேயே அவர்களுக்குக் கல்வி வராது என சான்றளித்து, அவர்களுடைய வாழ்வாதாரத்தைத் தேடப் பயன்படும் தொழில் செய்ய தேவையான தொழில் பயிற்சி நோக்கித் தள்ளிவிடுவதையே இது முதன்மையாகக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக, கிராமப்புற மாணவர்களையும், ஒடுக்கப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களையும், “உனக்குக் கல்வி வராது“ என அவர்களது வகுப்பறைகளிலிருந்து வெளியேற்றி சான்றளித்து விடுவர்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உயர்க்கல்வியில் கணிதம் அறிவியலுக்கு பதிலாக, சட்டம் மற்றும் கலை படிப்பு மேற்கொள்வதே வாய்ப்பு என்ற சூழல் உருவாகியிருந்த காலகட்டத்தில், அண்ணல் அம்பேத்கர் அவர்கள், 1920களிலேயே ஆங்கிலேய அரசிடம் உயர்க்கல்வியில் கணிதமும், அறிவியலும் பயிலாமல் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை எவ்வாறு முன்னேறும் என்ற வினாவை எழுப்பி, உயர்க்கல்வியில் கணிதம் அறிவியல் படிக்க அரசே வாய்ப்பினை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தார்.

இன்றைய மோடி அரசு, மாணவர்களை பள்ளிக் கல்வி முறையிலிருந்தே அப்புறப்படுத்தி, பெரும் பகுதி மக்கள் உயர்க்கல்வியில் கணிதம் - அறிவியல் படிக்க வாய்ப்பற்றவர்களாக மாற்றுகிறது.

இன்றைக்கு இந்தியாவில், ஒடுக்கப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் பல இலட்சம் பேர் கல்வி உதவித் தொகைப் பெற்று கல்வி கற்று வருகின்றனர். அதிலும், இந்தியா விடுதலை பெற்ற ஐம்பதாண்டுகளுக்குப் பிறகுதான், நீதிபதி இராசேந்திர சச்சார் குழுவின் அறிக்கையின் வெளிச்சத்தில் சிறுபான்மை மதப்பிரிவுகளைச் சேர்ந்த மாணவர் களுக்கான கல்வி உரிமைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படத் தொடங்கியுள்ளது.

இவற்றையெல்லாம் சகித்துக் கொள்ள முடியாத ஆர்.எஸ்.எஸ்., நேரடியாக மக்கள் அனுபவித்து வரும் இந்த உரிமைகளை ஒழிக்க துணிவு கொள்ளவில்லை. ஆனால், இந்தப் புதிய கல்விக் கொள்கையின் வாயிலாக மறைமுகமாக இதை ஒழிக்க திட்டம் தீட்டியுள்ளது.

பதினைந்து அகவையிலிருந்து இருபத்துநான்கு அகவைக்குள் சற்றொப்ப 50 கோடி மாணவர்கள் இருக்கும் நாட்டில், “பொருளியல்“ சூழலில் பின் தங்கியுள்ள 10 இலட்சம் மாணவர்களுக்கு மட்டுமே, அவர்களது மதிப்பெண் அடிப்படையில் கல்வி உதவித் தொகை வழங்கப்படும் என்று புதிய கல்விக் கொள்கைக்கான ஆவணத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. “தகுதி“ - “திறமை“ என்று கூறிக் கொண்டு, இட ஒதுக்கீட்டையும், ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் உரிமைகளையும் ஒழிக்கும் சதித்திட்டத்தையே ஆர்.எஸ்.எஸ். மோடி குழுவினர், புதிய கல்விக் கொள்கையின் வாயிலாக நிறைவேற்றத் துடிக்கின்றனர்.

அண்மையில், உத்திரப்பிரதேச முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள பா.ச.கவின் யோகி அதித்தியநாத்,

ஒருபடி மேலே போய் அங்குள்ள தனியார் மருத்துவக் கல்லூரிகளில், ஒடுக்கப்பட்ட, பழங்குடியின, பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த இட ஒதுக் கீட்டை நேரடியாகவே பறித்து ஆணையிட்டுள்ளார். ஆர்.எஸ்.எஸ். கும்பலால், இந்தியாவின் அடுத்த தலைமையமைச்சராக அவர் முன்னிறுத்தப்பட்டாலும் வியப்பதற்கு ஒன்றுமில்லை!

இந்த புதிய கல்விக் கொள்கைத் திட்டத்தின் நீட்சியாகத்தான், மருத்துவ சேர்க்கைக்கான அனைத்திந்திய அளவிலான “தேசிய தகுதி மற்றும் பொதுநுழைவுத் தேர்வு“ (National Eligibility cum Entrance Test - NEET) என்று சொல்லப்படும் “நீட்“ தேர்வு முறை திணிக்கப்பட்டுள்ளது.

*த.க. :* **“நீட்” தேர்வு முறையை தமிழ்நாடு மட்டும் ஏன் எதிர்க்கிறது என்று, அனைத்திந்திய அளவில் பலரும் கேள்வி எழுப்புகின்றனரே..**

***பிரின்சு :*** ஆம். அது உண்மைதான்! “நீட்“ தேர்வை தமிழ்நாடு எதிர்ப்பதற்கு பல வரலாற்றுச் சிறப்புமிக்கக் காரணிகள் உள்ளன. நம் மரபும் அப்படிப்பட்டது!

1951ஆம் ஆண்டு, மருத்துவக் கல்வி சேர்க்கைக்கு விண்ணப்பம் கூட போடாத செண்பகம் துரைராசு என்பவரின் மனுவை வைத்துக் கொண்டு, இந்தியாவின் உச்ச நீதிமன்றம் தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வியில் வழங்கப்பட்டு வந்த இட ஒதுக்கீட்டை இரத்து செய்து தீர்ப்பு வழங்கியது. அத்தீர்ப்பு தமிழ்நாட்டில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. பெரியார் போன்ற தலைவர்கள் வலுவாகக் குரல் கொடுத்தனர்.

அதன் விளைவாக, 1950 சனவரி 26இல் செயலுக்கு வந்த இந்திய அரசமைப்புச் சட்டம், வெறும் பதினைந்தே மாதங்களில் திருத்தம் செய்யப்பட்டு, கல்வியிலும், சமூகத்திலும் பின்தங்கிய மக்களுக்கு இட ஒதுக்கீடு பெறுவதற்கு வழிவகுத்தது.

1954 முதல் 1963 வரை ஒன்பதாண்டுகள் தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த கர்மவீரர் காமராசர், தமிழ்நாட்டில் பல கல்வி நிலையங்களை ஏற்படுத்தினார். 3 கிலோ மீட்டருக்கு ஒரு தொடக்கப்பள்ளி, 5 கிலோ மீட்டருக்கு ஒரு உயர்நிலைப் பள்ளி என்பதோடு நிற்காமல், மதுரை மருத்துவக் கல்லூரி (1954), தஞ்சை மருத்துவக் கல்லூரி (1959), கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி (1960), நெல்லை மருத்துவக் கல்லூரி (1965) என மாவட்டம் தோறும் குறிப்பிடத்தக்கக் கல்லூரிகளை அவர் உருவாக்கினார்.

தமிழ்நாட்டில்தான், கிராமப்புற மாணவர்களுக்கு, கல்லூரி சேர்க்கைகளில் சிறப்பு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. மருத்துவக் கல்லூரி பட்ட மேற் படிப்பில் 50 இட ஒதுக்கீடும் தமிழ்நாட்டில்தான் இருந்தது. இப்படி, சமூக நீதி போர்க்களமாக உள்ள தமிழ்நாடுதான், நீட் தேர்வையும் எதிர்த்து நின்று போராடுகிறது.

*த.க. :* **தனியார் மருத்துவக் கல்லூரிச் சேர்க்கை யில் நடைபெற்று வரும் பல்வேறு முறைகேடுகளால் மருத்துவக் கல்வி வணிகமயமாகும் சூழலைத் தடுக்கவே, “நீட்” தேர்வு கொண்டு வரப்பட்டுள்ள தாகவும், எனவே அதை வரவேற்பதாகவும் சிலர் கூறுகிறார்களே.. அது பற்றி தங்கள் கருத்து ?**

***பிரின்சு :*** கடந்த ஆண்டு (2016 - 2017) அனுபவம், நீட் தேர்வு தனியார் வணிகக் கொள்ளையை தடுக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது. வணிகக் கொள்ளையைத் தடுக்கிறோம் என்ற காரணத்தை முன் வைத்து, கூட்டாட்சி - கல்வி - பொதுச் சுகாதாரத்துறை ஆகிவற்றின் மீதான மிகப் பெரிய தாக்குதலையே “நீட்” தேர்வின் மூலம் நடத்து கிறார்கள்.

“நீட்“ தேர்வை எதிர்க்கும் போராட்டம், மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்காக நடைபெறும் போராட்டம் என்று சுருக்கிவிடக் கூடியதல்ல!

“நீட்“ தேர்வின் மூலமாக, ஒரு மாநில அரசுக்கு தன்னுடைய மாநிலத்தில் உள்ள கல்லூரியில் மாணவர் களைச் சேர்க்கும் குறைந்தபட்ச நிர்வாக உரிமைகூட கிடையாது என்று மறுக்கிறது இந்திய அரசு! அதேபோல், வெவ்வேறு வரலாற்று வழிக் காரணங் களால் ஒவ்வொரு மாநிலத்திலும் நிலவுகின்ற இட ஒதுக்கீடுகளை, ஒரேடியாகப் பறிக்கிறது இந்திய அரசு! வெறும் மாணவர் சேர்க்கை என்பதோடு மட்டுமின்றி, மாநிலங்களின் உரிமைகளைப் பறிக்கும் செயலாகவும் “நீட்“ தேர்வு பார்க்கப்பட வேண்டும்.

இருபதாண்டுகளாக மருத்துவம் மற்றும் பொறி யியல் பட்டப்படிப்புகளில் சேர்வதற்கு நுழைவுத் தேர்வு நடத்திய தமிழ்நாடு அரசு, அதனால் பெற்ற அனு

**“புதிய கல்விக் கொள்கை’ என்பது, மாணவர்களைப் படிக்க வைப்பதற்கான கல்விக் கொள்கை அல்ல! கல்வி பயில்வதிலிருந்து ஒவ்வொருவரையும் வடிகட்டி வெளியேற்றும் நோக்கத்துடனேயே இது உருவாக்கப்பட்டுள்ளது.”**






பவத்தின் அடிப்படையில்தான், 2007ஆம் ஆண்டு இந்நுழைவுத் தேர்வை இரத்து செய்து சட்டம் இயற்றியது. அந்த சட்டம் சென்னை உயர் நீதிமன்றத்தாலும், உச்ச நீதிமன்றத்தாலும் உறுதி செய்யப்பட்டது. இப்பொழுது, அதை மீறும் வகையில்தான் நீட் தேர்வு கொண்டு வரப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையில், கிராமப்புற மற்றும் தமிழ்வழிப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை இப்பொழுதே மிகக் குறைவாக உள்ள சூழலில், நீட் தேர்வு இதை மேலும் மோசமாக்கப் போகிறது. தமிழ்நாடு அரசின் பாடத் திட்டமும், பள்ளிச் சூழலும் தரம் உயர்த்தப்பட வேண்டியது தேவைதான். எனினும், அதைக் காரணமாக வைத்துக் கொண்டு தமிழ்நாடு அரசின் கல்வி உரிமையையே பறிப்பது எவ்வகையில் ஞாயம்?

தமிழ்நாட்டிலுள்ள மாவட்ட ஆட்சியர்களின் பணி என்ன தெரியுமா? பத்தாம் வகுப்பில் அரசுப் பள்ளிகளில் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறும் ஒடுக்கப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களில் 20 பேரை மாவட்டந்தோறும் தேர்ந்தெடுத்து, அரசு செலவில் அவர்களை தனியார் பள்ளிகளில் மேனிலைக் கல்விப் படிக்க வைக்கிறார்கள். இராமநாதபுரம், பெரம்பலூர் போன்ற ஒரு சில விதிவிலக்கான மாவட்டங்களில்தான், அரசுப் பள்ளிகளில் மேனிலைக் கல்வி படிக்க வைக்கிறார்கள். கோயில் வரை தேரை நாம் கஷடப்பட்டு இழுத்துச் செல்வோமாம், அதன்பிறகு அதை வேறு யாரோ இழுத்துச் செல்வார்களாம்.

அரசு நிர்வாகமே இப்படி நடந்து கொண்டால், எளிய மக்கள் அவர்களது பிள்ளைகளை எங்கே படிக்க வைப்பார்கள்? இப்படி, கெடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டின் பள்ளிச் சூழலை எதிர்த்து நாம் போராடித்தான் ஆக வேண்டும். ஆனால், இவற்றை சரி செய்ய ஒரு முயற்சியும் எடுக்காமல், "ஒற்றை நுழைவுத் தேர்வு" என்ற பெயரில், மாநில அரசுகளிடமிருந்து மாணவர் சேர்க்கை போன்ற நிர்வாக உரிமையைக்கூட நடுவண் அரசு பறிப்பது எந்த வகையில் ஞாயம்?

வணிகச்சூழலை ஒழிக்கிறோம் என்று கூறி இவர்கள் கொண்டு வந்த "நீட்" நுழைவுத் தேர்வின் பெயரால், இப்பொழுது புதிது புதிதாக பயிற்சி நிறுவனங்கள் முளைக்கத் தொடங்கிவிட்டன. நன்றாக மதிப்பெண் எடுப்பவர்களை மட்டும் தேர்ந்தெடுத்து, அதிகளவில் கட்டணம் பெற்று நடத்தப்படும் இந்த "சிறப்புப் பயிற்சி" நிறுவனங்களில் படிப்பவர்கள் மட்டுமே "நீட்" தேர்வில் தேர்ச்சி பெற்று, மருத்துவக் கல்லூரிகளில் இடம்பிடிக்க முடியும் என்ற நிலை வரப்போகிறது.

ஒரு முறை சுட்ட தோசையை மீண்டும் சுட்டால், அது தீய்ந்துதான் போகும்! அப்படித்தான் தேர்வுக்கு மேல் தேர்வு என்றால் நம் மாணவர்கள் மருத்துவக் கல்வியை விட்டே விலகிப் போவார்கள். உயர் வகுப்பு மற்றும் பணக்கார சமூகத்தினர் பெரும் எண்ணிக்கையில் மருத்துவக்கல்வியில் நுழைய, சட்ட வழியிலேயே வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதே "நீட்" தேர்வு முறையாகும்!

*த.க. :* **பல்வேறு கல்விமுறைகள் இருப்பதை சமன்படுத்தவே இந்தியாவில் இது போன்ற ஒற்றைக் கல்வி முயற்சிகள் கொண்டு வரப்படுகின்றன என்கிறார்களே?**

***பிரின்சு :*** இந்தியா என்பது பல்வேறு தேசிய இனங்கள், மொழிகள், பண்பாடுகள் கொண்டுள்ள மக்கள் வாழும் நாடு! இங்கு, ஒற்றைக் கல்விமுறையும் நுழைவுத் தேர்வுகளும் கல்வித்தரத்தை உயர்த்தும் சரியான நடவடிக்கைகள் அல்ல! அது சாத்தியமானதும் அல்ல!

ஸ்காட்லாந்து, வேல்ஸ், அயர்லாந்து போன்ற பல்வேறு மொழி இன மக்கள் கூடி வாழும் "ஐக்கிய பிரிட்டன்" அரசில், ஒரே பாடத்திட்டம் கிடையாது. ஐரோப்பாவில் ஒரே பாடத் திட்டம் கிடையாது. அவரவரும் அவரவர் சூழலில், அவர்களுடைய தாய்மொழியில் கல்வி கற்கின்றனர்.

ஆனால், அவர்களைவிட வளர்ச்சி குறைவாக உள்ள இந்தியாவில் மட்டும் ஒற்றை பாடத் திட்டம், நுழைவுத் தேர்வு என்றெல்லாம் ஏன் திணிக்க வேண்டும்? குறைந்தபட்சம், கணிதம், அறிவியல் போன்ற பாடத்திட்டங்களைக் கூட, இந்தியா போன்ற பன்மைத்துவ சூழல் நிலவும் நாட்டில் ஒரே பாடத்திட்டமாக கொண்டு வர முடியாது.

த.க. : **அனைந்திந்திய அளவிலான இந்த நுழைவுத் தேர்வுகள் சி.பி.எஸ்.இ. பாடத் திட்டத்தின் வாயிலாகவே நடத்தப்படுவது ஏன்?**

***பிரின்சு :*** நடுவண் கல்வி வாரியப் பாடத் திட்டமான சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தின்படியே, இந்த அனைந்திந்திய நுழைவுத் தேர்வுகள் நடத்தப் படுகின்றன. இதன் மூலம், பல்வேறு மாநிலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாநில பாடத் திட்டங்களை இரண்டாம் பட்சமாக ஒதுக்கிவிட்டு, அனைவரையும் சி.பி.எஸ்.இ. பாடத்திட்டம் நோக்கி இழுத்து வர முயற்சி நடக்கிறது. தமிழ்நாட்டில், சமச்சீர் கல்வி வந்த பிறகு தனிப் பாடத்திட்டத்தைக் காட்டி செல்வாக்கு செலுத்த முடியாத மெட்ரிக் பள்ளிகள், தற்போது அதிகளவில் சி.பி.எஸ்.இ. பாடத்திட்டப் பள்ளிகளாக மாறி வருவதைக் கவனிக்கலாம்.

மேலும், இந்த சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில்தான் இந்தி சமற்கிருத மொழிப் பாடங்களைப் புகுத்த இந்திய அரசு பல்வேறு செயல்திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகிறது. இதன் மூலம், தமிழ்நாட்டிலேயே சி.பி.எஸ்.இ. பள்ளிகள் மூலம் இந்தி மொழியைக் கொண்டு வந்து விடலாம். இது தமிழ் மொழிப் பாடத்தை நீக்கிவிட்டு, இந்தியை தமிழ்நாட்டிலேய கட்டாயப் பாடமாக்கும் முயற்சியாகும்.

த.க. : **இந்த அபாயங்களைத் தடுக்க தமிழ்நாடு அரசு என்ன செய்ய வேண்டும்?**

***பிரின்சு :*** தமிழ்நாடு அரசு நடத்தும் மருத்துவக் கல்லூரிகளின் இருக்கைகளுக்கும், தமிழ்நாட்டிலுள்ள தனியார் மருத்துவக் கல்லூரிகளில் அரசின் இருக்கை களுக்கும் “நீட்“ தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று, கடந்த சனவரியில் தமிழ்நாடு அரசு சட்டம் நிறைவேற்றியுள்ளது. இப்பொழுது வரை, அச்சட்டத்திற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ஏற்பிசைவு அளிக்கவில்லை.

எனவே, உடனடியாக அச்சட்டத்திற்கு இந்தியக் குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவைப் பெற, இந்திய அரசுக்குத் தமிழ்நாடு அரசு அரசியல் அழுத்தங்கள் அளிக்க வேண்டும். இதை முன் வைத்து, அனைத்துக் கட்சிக் குழுக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்துச் சென்று இந்திய நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டு, “தமிழ்நாடு அரசின் சட்டத்திற்கு இதுதான் மதிப்பா?“ என்று வினா எழுப்ப வேண்டும்.

த.க. : **தமிழ்நாட்டில் சூழலியல் கல்வியின் தேவை எந்தளவிற்கு உள்ளது?**

***பிரின்சு :*** தமிழ்நாட்டில் மட்டுமின்றி, இன்றைக்கு நுகர்வியம் மேலோங்கி வருகின்ற காலகட்டத்தில், நாம் வாழுகின்ற இந்தப் புவி வெப்பமயமாகி வரும் சூழலில், முன் எப்போதும் இல்லாத அளவிற்கு “சூழலியல் கல்வி“க்கான தேவை வளர்ந்துள்ளது.

பருவமடைந்து வளரும் இளையோர்கள், தான் காண்பதையெல்லாம் தனக்குச் சொந்தம் என்கிற நுகர்விய மனப்போக்குடன் வளர்த்தெடுக்கப்படு கிறார்கள். இயற்கைக் கொடையாக அளிக்கும் ஆறுகள், மலைகள் தொடங்கி, நாம் அன்றாடம் பயன்படுத்தும் கைப்பேசி, கணினி முதற்கொண்டு அனைத்தையும் நுகரும் பொருளாகக் கருதுகிறார்கள். இந்த மனப் போக்கை சிறு பருவத்திலிருந்தே மாற்ற, “சூழலியல் கல்வி“ அவசியத் தேவையாகும்.

குழந்தைகளை பூங்காக்களுக்கு அழைத்துச் சென்று அங்குள்ளவற்றைப் பார்வையிட வைக்க வேண்டும். அங்கு வெறும் மலர்ச்செடிகளும் மரங்களும் மட்டும் இருக்கப் போவதில்லை, பூச்சிகளும், புழுக்களும்கூட இருக்கும். நம் சமூகமும் அப்படித்தான் என்று அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

புல் வெளியில் நடக்கக் கூடாது, ஒரு செடியின் முழுமையே பூவாக மலர்கிறது, எனவே அதைப் பறிக்கக் கூடாது எல்லாம் நுகர்வதற்கானப் பொருட்கள் அல்ல என்பது போன்ற செய்திகளையெல்லாம் பதிய வைக்க வேண்டும். நடைமுறை அனுபவத்துடன் இணைந்த இதுபோன்ற சூழலியல் கல்வியை சிறு பருவத்திலிருந்து பதிய வைத்தால்தான், நம் சமூகம் பற்றிய புரிதல்கள் அவர்கள் மனத்தில் பதியும்.

புலி பசித்தால்தான் வேட்டையாடும். தனது தேவைக்கானதை மட்டுமே வேட்டையாடும். அது போல், மனிதர்கள் தனது தேவைகளுக்காக மட்டுமே பொருளீட்ட வேண்டும் என்பது போன்ற உளவி யலைப் பதிய வைக்க வேண்டும்.

த.க. : **சூழலியல் கல்வியை மாநில அளவிலான பாடத்திட்டத்தில் வைத்தால் போதுமா?**

***பிரின்சு :*** தற்பொழுது தமிழ்நாடு அரசு, மேனிலைக் கல்விக்கான பாடத்திட்டங்களை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. இதில், சூழலியல் கல்வியையும் சேர்க்க வேண்டும். ஏற்கெனவே, உச்ச நீதிமன்றம் இது குறித்து அறிவுறுத்தி இருக்கிறது. எனவே, தமிழ்நாடு அரசு இதனைக் கவனத்தில் கொண்டு சூழலியல் கல்வியை பள்ளிப் பாடத் திட்டத்தில் சேர்க்க வேண்டும். தமிழ்நாட்டு சனநாயக ஆற்றல்களும், கல்வி உரிமைச் செயல்பாட்டாளர்களும் இதற்காக வலுவாகக் குரல் எழுப்ப வேண்டும்.

எனினும், மாநில அளவிலான பாடத்திட்டமாக மட்டுமல்ல, மாவட்ட அளவில்கூட சூழலியல் கல்வி மாறுபட வாய்ப்புண்டு. அவரவர் மாவட்டங்களில் உள்ள ஆறுகள், ஏரிகள், குளங்கள், மலைகள், தட்பவெப்ப சூழல் அனைத்தையும் அவர்கள் மனத்தில் பதிய வைத்தால், சூழலியல் சுரண்டலும், நுகர்விய மோகமும் சமூகத்தில் குறைவதற்கான வாய்ப்புண்டு! இந்தப் புரிதலுடன் உருவாகும் இளைய தலைமுறை யினரே, நாம் விரும்புகின்ற மாற்று சமூகத்தை - சமத்துவமான சமூகத்தைப் படைக்க முடியும்! அதற்குக் கல்வியிலிருந்து அடிப்படை மாற்றங்கள் வேண்டும்!

நேர்கண்டவர் : ***க. அருணபாரதி.***

# நிகரன் விடைகள்

**காங்கிரசுக் கட்சி உ.பி. சட்டப்பேரவைத் தேர்தலில் ஐந்தாவது இடம் பெற்றது; அதாவது ஏழு தொகுதிகளில் வென்றது. தில்லி மாநகராட்சித் தேர்தல்களில் மூன்றாவது இடம்தான் பெற்றுள்ளது. இராகுல்காந்தி தலைமை அவ்வளவுதானா? காங்கிரசுக்கு ஏன் இத்தகைய வீழ்ச்சி?**

காங்கிரசுக்கு வீழ்ச்சி என்பதைவிட, இந்திராகாந்தி தொடங்கி வைத்த வாரிசுரிமை அரசியலுக்கு ஏற்பட்ட வீழ்ச்சி என்பதே மிகவும் பொருத்தம்!

நேருவின் மகள் என்ற அரசியல் பின்புலம் இந்திராகாந்திக்கு ஒரு வலிமையாக இருந்தது. ஆனால் நேருவால் வாரிசுரிமைப்படி கொண்டு வரப்பட்டவர் அல்லர் இந்திரா. அவருக்கென்று பொது வாழ்வில் ஈடுபாடு, அரசியல் அறிவு, போராட்ட உணர்வு, அரசியல் அனுபவம் எல்லாம் இருந்து, ஒரு கட்டத்தில் ஆட்சித் தலைமை, கட்சித் தலைமை ஆகியவற்றைக் கைப்பற்றினார்.

ஆனால் அதே இந்திராகாந்தி, தன் அரசியல் வாரிசாக முரட்டு மகன் சஞ்சய் காந்தியைத் திணித்தார். அவர் இறந்தபின், மூத்த மகன் இராசீவ்காந்தியைத் திணித்தார்.

இராசீவ்காந்திக்குப் பின் அவர் மனைவி சோனியா காந்தி - சோனியா மகன் இராகுல் காந்தி ஆகிய இரண்டு வாரிசுரிமைகளும் சொந்தத்தகுதி அற்றவை. காங்கிரசின் வீழ்ச்சிக்கு முதன்மைக் காரணங்கள் சோனியாவும், இராகுல் காந்தியும் ஆவர்.

உபியில் முலாயம் அகிலேசு சமாஜ்வாதி கட்சியின் வீழ்ச்சிக்குக் காரணம், முலாயம் சிங்கின் உடன் பிறப்புகளாக - பிள்ளைகளாக உள்ள தகுதியற்ற ஆட்களின் வாரிசுரிமை அரசியல் ஆகும். ஏற்கெனவே, பீகாரில் லாலு கட்சியின் வீழ்ச்சிக்குக் காரணம் அவரின் வாரிசுரிமை அரசியல்தான்!

செயலலிதாவின் குடும்பம் அல்லாத குடும்ப அரசியல்தான் சசிகலா வாரிசுரிமை அரசியல்! அது இப்போது சந்தி சிரிக்கிறது.

கருணாநிதியின் வாரிசுரிமை அரசியல் எவ்வளவோ குத்துவெட்டுகளையும் கொலைகளையும் அரங்கேற்றி யுள்ளது. இனியும் என்னென்ன நடக்குமோ?

முதலில் வாரிசுரிமை அரசியல் சனநாயகத்தைத் தண்டிக்கிறது. முடிவில், சனநாயகம் வாரிசுரிமை அரசியலைத் தண்டிக்கிறது.

தகுதியும் மக்களுக்கான அர்ப்பணிப்பும் இருந்தால், தலைவரின் பிள்ளையோ உடன்பிறப்போ அடுத்த தலைமை ஆகலாம்; தவறில்லை. ஆனால், "தலைவர் வாரிசு" என்ற ஒற்றைத் தகுதியைப் பெரிதும் நம்பி தலைவராவது அல்லது தலைவராக்குவது வீழ்ச்சிக்கே வழி வகுக்கும்!

**ஓ. பன்னீர்ச்செல்வம் வீட்டுவாசலில் நிற்க நேர்ந் தால் "தற்கொலை செய்து கொள்வேன்" என்று நாஞ்சில் சம்பத் கூறியது சரிதானா?**

நாஞ்சில் சம்பத் போன்றவர்கள் நாக்கு நாட்டியக் கலைஞர்கள். அவர் கூற்றை இரசிக்கத் தெரியவில்லை உங்களுக்கு!

**இந்திய வங்கிகளில் பல்லாயிரம் கோடி கடன் வாங்கி ஏமாற்றிவிட்டு, இலண்டனுக்கு ஓடிவிட்ட விசய் மல்லையாவுக்கு - பிரித்தானிய நீதிமன்றம் பிணை வழங்கி இருப்பது சரியா?**

விசய் மல்லையாவை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பும் தொடர் நடவடிக்கையில் ஒன்றாக, கைது, வழக்கு, அதில் பிணை என்று வழங்கப்பட்டிருக்கிறது. அடுத்து, வாய்தா போட்டுள்ளார்கள். அதில் என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.

**அ.இ.அ.தி.மு.க.வில் முழுநேரச் சொற்பொழிவா ளர்கள் 850 பேர் இருப்பதாகவும், இவர்களில் 10 பேர் விண்மீன் பேச்சாளர்கள் என்றும் கூறப் படுகிறது. செயலலிதா இறந்ததிலிருந்து, இவர் களுக்கு வாய்ப்பில்லாமல் வறுமையில் வாடுவதாகச் சொல்லப்படுகிறது. இவர்களுக்கு அ.தி.மு.க. தலைமை துயர் துடைப்பு நிதி உதவி செய்யாதா?**

இவர்களுக்கு அ.தி.மு.க.வும் நிதி உதவி செய்யலாம்; தி.மு.க.வும் நிதி உதவி செய்யலாம். இவர்கள் அத்தனை பேரும் மேடையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி, செயல் தலைவர் ஸ்டாலின் ஆகியோரைப் பற்றிதான் இத்தனை ஆண்டுகளாக வசைமாறிப் பொழிந்து வந்தார்கள். இவர்கள் மக்களுக்கு விவரம் சொல்லும் வகையிலா பேசினார்கள்? தி.மு.க.வை இழிவாகப் பேசாமல் இப்போது இருக்கிறார்கள் அல்லவா! அதற்காக தி.மு.க.வும் நிதி வழங்கலாம்!

**தமிழிசை சவுந்திரராசனுக்கு எதிரான மறுப்பறிக் கை விட்ட துரைமுருகன் தி.மு.க. ஆட்சியால்தான் காவிரித் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது, 1998இல் காவிரி ஆணையம் அமைக்கப்பட்டது, காவிரித்**

**தீர்ப்பாயம் இறுதித் தீர்ப்பை வழங்கியது, அதை அரசிதழில் வெளியிடத் தி.மு.க.தான் போராடியது என்று அடுக்கியுள்ளார். இவை உண்மையா?**

துரைமுருகனின் இந்தச் சரடுகள் ஒரு பக்கம் இருக்கட்டும். அவர் அறிக்கையில் இடைக்காலத் தீர்ப்பின்படி, இறுதித் தீர்ப்பின்படி தி.மு.க.தான் கர்நாடகத்திடமிருந்து காவிரி நீர் வாங்கியது என்று ஓர் இடத்தில்கூட சொல்லவில்லையே, பிறகென்ன சாதனையாம்?

காவிரித் தீர்ப்பாயம் 1990இல் அமைக்கப்பட்டது உச்ச நீதிமன்றத் தீர்ப்பினால்தான்! அது, தி.மு.க. ஆதரித்த வி.பி.சிங் நடுவணரசின் கோரிக்கையால் அல்ல! வி.பி. சிங் அரசு, நீதிமன்றம் எத்தீர்ப்பு சொன் னாலும் ஏற்றுக் கொள்கிறோம் என்று கூறி ஒதுங்கிக் கொண்டது.

காவிரித் தீர்ப்பாய இடைக்காலத் தீர்ப்பைச் செயல்படுத்த தலைமை அமைச்சர் வாச்பாயியைத் தலைவராகக் கொண்டு, நான்கு மாநில முதலமைச்சர் களையும் உறுப்பினராகக் கொண்டு, ஒன்றுக்கும் உதவாத, “காவிரி ஆணையம்“ அமைப்பதை அன்று தி.மு.க. ஆட்சி ஏற்றுக் கொண்டது. கர்நாடகத்தின் கோரிக்கைக்குத் துணை போய் தமிழ்நாட்டிற்குத் துரோகம் செய்தது.

தலைமை அமைச்சர் தலைமையிலான ஆணையத் தில் நான்கு முதலமைச்சர்களும் ஒப்புக் கொண்டால் தான் (Consensus), அதில் ஒரு முடிவெடுக்க முடியும்.

“எலி பிடிக்காதது பூனையா? அதிகாரமில்லாதது ஆணையமா?“ என்று அப்போது நாம் கேட்டோம். அந்த ஆணையம் இடைக்காலத் தீர்ப்பைச் செயல் படுத்தவே இல்லை!

காவிரித் தீர்ப்பாய இறுதித் தீர்ப்பு தி.மு.க. ஆட்சி செய்த காலத்தில் 2007 பிப்ரவரி 5இல் வந்ததில் தி.மு.க.வுக்கு எந்தப் பங்களிப்பும் இல்லை. காவிரி இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட எந்த நாளில் என்ன போராட்டம் நடத்தியது தி.மு.க.? காவிரித் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தானாகக் கட்டளையிட்டது. அது தி.மு.க. கோரிக்கையும் இல்லை.

காவிரித் தீர்ப்பாயம் அமைத்ததை எதிர்த்து, அத் தீர்ப்பாய நீதிபதிகள் தமிழ்நாட்டில் கையூட்டு வாங்கி விட்டார்கள் என்று கூறி அவர்கள் மீது வழக்குப் போட்ட தேவகவுடாவை இந்தியாவின் தலை மை அமைச்சர் ஆக்கிய சாதனைதான் தி.மு.க.வின் “சாதனை“!

காவிரி மேலாண்மை வாரியம் மறுநாள் அமைக்கப் படவிருந்த நிலையில், முதல் நாள் அதைத் தடுத்து, தமிழ்நாட்டைத் தவிக்கவிட்டுள்ள சாதனைதான் தமிழிசைக் கட்சி ஆட்சி செய்த “சாதனை“!

காவிரி பற்றி தருக்கம் செய்து கொள்ள தமிழி சைக்கும் துரைமுருகனுக்கும் அடிப்படைத் தகுதி எதுவுமில்லை!

●



ராகுல் காந்தி



நாஞ்சில் சம்பத்



விசய் மல்லையா



தமிழிசை சௌந்தரராஜன்

வரலாறு அறிவோம்

# தமிழவேள் த.வே. உமா மகேசுவரனார்

## பிறந்த நாள் 7.5.1883

முதல், இடை, கடைத் தமிழ்ச்சங்கங்கள் அழிவிற்குப் பின்னர் தமிழ்மொழி தாழ்வு நிலை கண்டது. அன்று தொடங்கி தாழ்வு நிலையடைந்த தமிழ்மொழி பண்டைய காலம் போல் மீண்டும் ஏற்றம் பெற வேண்டுமென்று இரண்டு பேர் விரும்பினார்கள். ஒருவர் பாண்டித்துரைத் தேவர், மற்றொருவர் உமா மகேசுவரனார்.

பாண்டித்துரைத் தேவர் 1901ஆம் ஆண்டு மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை தொடங்கினார். 1909இல் மதுரை தமிழ்ச் சங்கத்தின் 9ஆம் ஆண்டு விழா தஞ்சையில் நடைபெற்ற போது, தமிழ் ஆர்வலர்கள் சிலர் - தஞ்சை மண்ணில் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவிக்க விரும்பினர். தஞ்சை தமிழ்ச் சங்கம் எனும் பெயரில் சங்கத்தைத் தொடங்கிய போதிலும் அச் சங்கத்தைத் தொடர்ந்து நடத்த இயலவில்லை.



மீண்டும் 14.5.1911இல் த.வே. இராதாகிருட்டிணப் பிள்ளை முயற்சியில் கரந்தையில் தமிழ்ச்சங்கத்தை நிறுவினர். மதுரை தமிழ்ச் சங்கத்திற்கு அடுத்து தோற்று வித்த படியால் இச்சங்கம் ஐந்தாம் தமிழ்ச் சங்கம் என்று அழைக்கப்பட்டது. சங்கப் பணிகளைத் தொடர்ந்து தொய்வில்லாமல் நடத்திக் காட்டிய த.வே. இராதா கிருட்டிணப் பிள்ளை "சங்கம் நிறுவிய துங்கன்" என்று அழைக்கப்பட்டார். (துங்கன் என்றால் வலிமை வாய்ந்தவன் என்று பொருள்).

இவருக்குப் பின் தமிழ் ஆர்வலர் ஒருவர் சங்கப் பொறுப்பினை திறம்பட ஏற்றுப் பணியாற்றினார். இச்சங்கத்தின் ஊடாக தமிழுணர்ச்சியைப் பரப்பி உலக மெங்கும் வாழும் தமிழர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்தார். அவர் வேறு யாருமல்ல; தமிழவேள் என்றழைக்கப்படும் த.வே. உமா மகேசுவரனார் ஆவார். இவர் இராதா கிருட்டிணப் பிள்ளையின் உடன் பிறந்தவர்.

த.வே. உமா மகேசுவரனார் தஞ்சை மாவட்டம் கருந்திட்டைக்குடி எனும் (கரந்தை என்பதன் மருவிய பெயர்) ஊரில் வாழ்ந்து வந்த வேம்பப் பிள்ளை - காமாட்சி அம்மை ஆகிய இணையருக்கு மகனாக 7.5.1883இல் பிறந்தார். இவர் 12ஆம் அகவையில் தாயாரையும், தந்தையாரையும் இழக்க நேர்ந்தது. அதன் பிறகு சிற்றன்னையாகிய பெரிய நாயகத்தம்மையார் அரவணைப்பில் தொடக்கக் கல்வியை முடித்தார்.

தஞ்சைத் தூய பேதுரு கல்லூரியில் இளங்கலை வகுப்பு வரை படித்து வெற்றி பெற்றார். தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலக எழுத்தராக பணி புரிந்த வாறே பி.எல். பட்டம் பெற்றார். அதன் பிறகு தஞ்சையில்

கதிர்நிலவன்

புகழ்பெற்ற வழக்கறிஞரான கே. சீனிவாசகம் பிள்ளை என்பவரிடம் சேர்ந்து இளம் வழக்கறிஞர் ஆனார். நீதிமன்றத்தில் வழக்காடும் திறனை வளர்த்து கொண்ட உமா மகேசுவரனார் வழக்கறிஞர் தொழிலில் தனித்து நின்று புகழ் பெற்றார். இவரின் திருப்பெயர் தஞ்சை மாவட்டம் முழுவதும் பரவியது.

தம் இருபத்தைந்தாம் அகவையில், உலகநாயகி எனும் அம்மையாரை மணந்தார். இவருக்கு, பஞ்சாப கேசன், மாணிக்கவாசகம், சிங்காரவேலு என்று முத்தான மூன்று பிள்ளைகள். மூன்றாவது பிள்ளை பிறந்த நிலையில் மனைவி உலகநாயகி காலமானார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் தொடங்கிய போது அதன் உறுப்பினர்களாக வி. சாமிநாதப் பிள்ளை, எல். உலகநாதப் பிள்ளை, ஆர். வேங்கடாசலம் பிள்ளை, ந.மு. வேங்கடசாமி நாட்டார், நீ. கந்தசாமிப் பிள்ளை, த.வே. உமா மகேசுவரன் பிள்ளை ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். அதன் புரவலர்களாக பெத்தாச்சி செட்டியார், கோபாலசாமி இரகுநாத இராஜாளியார், சர்.ஏ.டி. பன்னீர் செல்வம் ஆகியோர் அறிவிக்கப் பட்டனர். பின்னர் த.வே. உமாமகேசுவரனார் சங்கத்தின் முழுப் பொறுப்பேற்று செயல்பட்டார்.

தொண்டு - தமிழ் - முன்னேற்றம் ஆகிய மூன்றும் சங்க இலச்சினையில் பொறிக்கப்பட்டு, சங்கத்தின் குறிக் கோளாக "உலக மக்களிடையே தமிழின் பெருமையை பரப்புவது" என்று பறைசாற்றப்பட்டது.

அதன் ஐந்து நோக்கங்கள் பின் வருமாறு: 1. வேற்று மொழி விரவாத தூய தமிழில் மக்கள் பிழையின்றிப் பேசுமாறும் எழுதுமாறும் செய்தல் 2. தமிழ்ப் பெரும்புலவர்களை ஒன்றுகூடச் செய்தலும், வெளி யுலகிற்கு அறிமுகப்படுத்தலும் 3. தமிழ் இலக்கியங் களைப் பரப்புதல் 4. தமிழின் இசை - நாடகப் பகுதி களை தக்காங்கு வளர்த்தல் 5. தமிழ்மொழிப் பயில் வோர்க்கு ஊக்கமளித்து மக்களிடையே தமிழ்ப்பற்றை வளர்த்தல்.

கரந்தை தமிழ்ச்சங்கத்தின் தனிப்பெரும் தலைவராக விளங்கிய உமா மகேசுவரனார், "இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சமசுகிருத ஆதிக்கம் காரணமாக தமிழ் தன் பெருமை இழந்து நின்றது. உயர்ந்த பதவியில் இருந்தவர்களுக்கு தமிழ் தெரியாது. தூய தமிழும் பலருக்கு எழுதவோ, பேசவோ வராது . இந் நிலையில் தான் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழ் வளர்க்கத் தோன்றியது " என்பார்.

அது அக்காலத்தில் உண்மையுமாகும். அப்போது திருவையாற்றில் கல்லூரி ஒன்று தஞ்சை சரபோசி அறக் கட்டளை மூலமாக நடத்தப்பட்டு வந்தது. அக் கல்லூரியில் சமசுகிருதம் மட்டுமே கற்று கொடுக்கப் பட்டு வந்தது. சரபோசி நிர்வாகத்தினர் தமிழ் கற்பிக்க அறக்கட்டளை ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்று காரணங் கூறி தமிழைப் புறக்கணித்தனர். இதைக் கேள்விப்பட்டு கொதிப்படைந்த உமா மகேசுவரனார் ஆவணம் முழுவதையும் படித்துப் பார்த்து விட்டு தமிழுக்கான தடை அதில் இல்லையென்று வாதாடி னார். அவரோடு வாதிட முடியாமல் சரபோசி நிர்வாகம் தோற்றுப் போய் தமிழ்மொழியில் கற்பிக்க ஒப்புக் கொண்டது.

மேலும், அவர் திருவையாற்று கல்லூரியை தமிழ் மயப்படுத்தும் முயற்சியில் இறங்கினார். அவர் தமிழ்க் கல்வி பாடத் திட்டத்தை தமிழறிஞர் கா. நமச்சிவாயர் அவர்களைக் கொண்டு எழுதச் செய்து வெளியிட்டார். அத்தோடு, திருவையாற்று கல்லூரியை அரசர் கல்லூரி எனப் பெயர் மாற்றினார். தமிழ்ப் பட்டப்படிப்பை ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு கற்றுத் தரவும் ஏற்பாடு செய்தார்.

அந்நாளில் ஒருவரது பெயருக்கு முன் மரியாதை தரும் பொருட்டு வடமொழியில் ஸ்ரீமான் என்றும், ஸ்ரீமதி என்றும் அழைக்கப்பட்டு வந்தது. வடமொழி எதிர்ப்பில் என்றும் உறுதி காட்டி வந்த உமா மகேசுவரனார் இதிலும் உறுதியாய் நின்று திருமகன், திருவாட்டி என்று தனித்தமிழில் மாற்றிக் காட்டினார்.

1916இல் நீதிக்கட்சி உருவான போது, அக்கட்சிக்கு தஞ்சை மாவட்டத்தில் அடித்தளமிட்டவர்கள் மூவர். அதில் சர். ஏ.டி. பன்னீர் செல்வம், ஐ. குமாரசாமி ஆகியோரோடு த.வே. உமா மகேசுவரனாரும் ஒருவர்.

காந்தியார் அவர்கள் தஞ்சாவூரில் உள்ள உக்கடை ஹவுசில் தங்கியிருந்த போது காந்தியாரைச் சந்தித்து பிராமணர்கள், பிராமணர் அல்லாதவர்களுக்கு இழைத்து வரும் அநீதி குறித்து முறையிட்டார்.

1920இல் சென்னை உள்ளாட்சிக் கழகச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்போது நடைபெற்ற தஞ்சை வட்டக் கழகத்தில் உமா மகேசுவரனார் போட்டியிட்டு தலைவரானார். அவரது பதவிக்காலத்தில் வரகூர் - அம்பது மேலகரச்சாலை மற்றும் ஆலங்குடி - கண்டியூர்ச் சாலைகள் போடப்பட்டன. மேலும் நாகத்தி, தொண்டரையன்பாடி என்னும் சிற்றூர் களுக்குச் செல்ல ஆற்றின் குறுக்கே பாலங்கள் கட்டப் பட்டன.

மேலும், ஐம்பதுகளாக இருந்த தொடக்கப்பள்ளிகள் எண்ணிக்கையானது நூற்று எழுபதாக உயர்த்தப் பட்டது.

உமா மகேசுவரனார் அரசுப் பதவியில் இருந்தபடி சமூகநலத் தொண்டுகள் புரிந்த போதிலும் அவரது சிந்தனை முழுவதும் கரந்தை தமிழ்ச் சங்கத்தை நோக்கியே இருந்தது.

மதுரை தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளிவரும் "செந்தமிழ்" இதழ் போல கரந்தை தமிழ்ச் சங்கத்திற்கும்

ஓர் இதழ் வெளிக் கொணர முடிவு செய்தார். இதழ் வருவதற்கு பணம் போதாமை காரணமாக இருந்தது. அவரின் சகோதரர் மறைவுக்குப் பின்னும் நிதி திரட்டும் முயற்சியிலிருந்து பின் வாங்கவில்லை. 1919இல் இதழுக்கு "தமிழ்ப்பொழில்" என்று பெயர்ச் சூட்டப்பட்டும் இதழ் தொடங்கப்படாதது கண்டு மனம் வருந்தினார்.

4.9.1921இல் கரந்தை தமிழ்ச்சங்கத்தின் பத்தாம் ஆண்டு விழா கரந்தை கந்தப்பச் செட்டியார் அற நிலையத்தில் நடைபெற்றது. கீழையூர் சிவ. சிதம்பரம் தலைமை தாங்கினார். அதில், "தமிழ் மொழியின் மேன்மையைப் பேணுதற் பொருட்டாகத் தமிழ்ப் பொழில் என்னும் திங்கட்டாளை வெளியிடுவதற்கு தக்கவாறு பொருளுதவி செய்ய வேண்டுமென்று தமிழ் மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறார்கள்" என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒருவழியாய், பதினோரு ஆண்டுகள் கழித்து 1925ஆம் ஆண்டு ***தமிழ்ப்பொழில்*** இதழ் வெளி வந்தது. மதுரை தமிழ்ச் சங்கம் நடத்திய ***செந்தமிழ்*** இதழும், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம் நடத்திய ***செந்தமிழ்ச் செல்வி*** இதழும், கரந்தை தமிழ்ச் சங்கம் நடத்திய ***தமிழ்ப்பொழில்*** இதழும் அன்றைய தமிழுணர்வாளர்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்று திகழ்ந்தது இங்கு குறிப்பிடத் தக்கது.

தமிழ்ப்பொழில் இதழின் அட்டைப்படம், உள்ளடக்கம் இவ்விரண்டும் மிகச் சிறப்பாக உமா மகேசுவரனார் அவர்களால் உருவாக்கப்பட்டது. தூய தமிழ்ச் சொற்களை அவ்விதழில் பயன்படுத்தினார். இதழாசிரியர் என்பதை "பொழிற்றொண்டார்" என்றும், தனியிதழ் "மலர்" என்றும், பன்னிரு மலர்கள் கொண்ட ஓராண்டுத் தொகுப்பை "துணர்" (பூங்கொத்து) என்றும், உறுப்பினர் கட்டணம் என்பதை கையொப்பத் தொகை என்றும், விலாசம் என்பதை உறையுள் என்றும் ஆங்கிலத்தில் வி.பி.பி. என்பதை 'விலை கொளும் அஞ்சல்' என்றும் அச்சிட்டு வெளியிட்டார்.



**மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய 'நீராருங் கடலுடுத்த' தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை தமிழ் சார்ந்த நிகழ்ச்சிகளில் முதன்முதலில் அறிமுகம் செய்துவைத்த பெருமை உமா மகேசுவரனாருக்கே உரியதாகும்.**

ஒவ்வொரு துணருக்கும் பொழிற்றொண்டர்கள் அமர்த்தப்பட்டனர். துணர் 10 முதல் துணர் 17 வரையிலும் உமா மகேசுவரனார் பணியாற்றினார். தமிழ்ப் பொழில் இதழின் நோக்கம் எதுவெனில், கரந்தை தமிழ்ச் சங்கத்தின் வாய்க்கருவியாக இருத்தலும், தமிழ் ஆய்வில் ஈடுபடுதலும் என்பதாக அறிவித்தார்.

அந்த இதழில் தமிழறிஞர் சதாசிவ பண்டாரத் தாருக்கு ஊக்கமளிக்கும் வகையில் அவர் எழுதிய தமிழ் மன்னர்கள் வரலாறு மற்றும் தமிழ் கல்வெட்டுச் சான்று குறித்து கட்டுரைகள் பலவற்றையும் வெளியிட்டார்.

நக்கீரன், யாழ் நூல், தொல்காப்பிய உரை, நெல்லை வருக்கக் கோவை , தமிழரசி குறவஞ்சி, பரத சாத்திரம் , சிலப்பதிகார புகார்க் காண்டம் , சிவமும் செந்தமிழும் ஆகிய நூல்களையும் அச்சிலேற்றி வெளிக் கொணர்ந்தார்.

மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய 'நீராருங் கடலுடுத்த' தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை தமிழ் சார்ந்த நிகழ்ச்சிகளில் முதன்முதலில் அறிமுகம் செய்துவைத்த பெருமை உமா மகேசுவரனாருக்கே உரியதாகும்.

'எழுத்துச்சீர்திருத்தம்' எனும் பெயரில் தமிழை அழிக்க முயலும் தமிழினப் பகைவர் செயலைக் கண்டித்து அவர் 11.6.1934 இல் நெல்லை இந்து கல்லூரியில் நடைபெற்ற 'சென்னை மாநிலத் தமிழர்' முதல் மாநாட்டில் பேசினார். அது பின்வருமாறு:

"அச்சுக் கோப்போரின் துன்பத்திற்காகச் சிலர் தமிழ் எழுத்துகளிற் சிலவற்றை அகற்ற விரும்புகின்றனர். வேறு சிலர் ' யீ ' என்ற ஆங்கில எழுத்தையும் தமிழிற் சேர்க்கக் கருதுகின்றனர். இவை எம்மொழியாளரும் கைக்கொள்ளாதவை. வீரமாமுனிவர், சி.யு. போப்பு போன்ற அயல்நாட்டார் கூட இவ்வாறு சொல்லத் துணிய வில்லை. வடகலை, தென்கலை உணர்ந்த நச்சினார்க்கினியர், பரிமேலழகர் போன்றோர்

வடநூலாற் கொள்கையில் அடிப்பட்டிருந்தும், தமிழ் மரபு இழுக்கா வண்ணம் உரைநூல்கள் இயற்றி னார்களே! ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றில் சீர்திருத்தம் செய்ய நிரம்ப இடமிருந்தும் அவற்றைத் திருத்தத் துணியாத போது தமிழ்மொழியை திருத்தலா மென்பது பேதமையாகும்."

1937ஆம் ஆண்டு இராசாசி அரசு கொண்டு வந்த பள்ளிகளில் கட்டாய இந்தித் திணிப்பைக் கண்டித்து 27.8.37 அன்று முதன் முறையாக கரந்தை தமிழ்ச் சங்கத்தில் கண்டனக் கூட்டத்தை உமா மகேசுவரனார் நடத்திக் காட்டினார்.

அதற்கு அடுத்த மாதம் சென்னை சௌந்தர்ய மகாலில் இந்தி ஆதிக்க எதிர்ப்பு தமிழர் கூட்டம் நடத்தப்பட்டது. அதிலும் நாவலர் சோம சுந்தர பாரதியாருடன் இணைந்து போர் முரசு கொட்டினார். அதன் பிறகே இந்தி எதிர்ப்புப் போர் தீவிரமடைந்தது.

26.12.1937 அன்று திருச்சியில் கி.ஆ.பெ. விசுவநாதம் ஒருங்கிணைப்பில் சென்னை மாகாணத் தமிழர் மாநாடு நடைபெற்றது. முன்னதாக பத்தாயிரம் பேர் பங்கேற்ற எழுச்சி ஊர்வலம் நடைபெற்றது. மாநாட்டிற்கு நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமை வகித்தார். உமா மகேசுவரனார் வரவேற்புரை நிகழ்த்தினார். இந்த மாநாட்டில் தான் பெரியார் தமிழறிஞர்களோடு முதன் முறையாக தன்னை இணைத்துக் கொண்டு இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசினார் என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

15.4.1938இல் நடைபெற்ற கரந்தை தமிழ்ச்சங்கத்தின் வெள்ளி விழாவில் உமா மகேசுவரனாருக்கு 'தமிழ வேள்' பட்டத்தை நாவலர் சோமசுந்தர பாரதியார் வழங்கினார். அது முதல் 'தமிழவேள்' உமா மகேசு வரனார் என்று அனைவரும் அன்போடு அழைக்கத் தொடங்கினர்.

1939ஆம் ஆண்டு திருச்சியில் அகில இந்திய தமிழர் மாநாடு நடைபெற்றது. நாவலர் சோமசுந்தர பாரதியார், திரு.வி.க., மறைமலையடிகள், பாரதிதாசன், பெரியார் ஆகியோரோடு உமா மகேசுவரனாரும் கலந்து கொண்டார். அந்த மாநாட்டில் தை முதல் நாளே தமிழ்ப்புத்தாண்டு என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டபோது முழுமனதோடு ஆதரித்துப் பேசினார்.

கல்கத்தாவில் இரவீந்திரநாத் தாகூர் நடத்திவரும் சாந்தி நிகேதனைப் போல் கரந்தை தமிழ்ச்சங்கம் மாற வேண்டுமென்று விரும்பினார். அதனைப் பார்வை யிட்டு கல்கத்தாவை விட்டு திரும்பும் போது உடல்நலம் குன்றியே காணப்பட்டார். பிறகு அயோத்தி அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மருத்து வர்கள் கைவிட்ட நிலையில் 9.5.1941 அன்று தனது தமிழ் மூச்சை நிறுத்திக் கொண்டார்.

●

# தஞ்சையில் காவிரி உரிமை: அஞ்சலக முற்றுகை

## நூற்றுக்கணக்கான உழவர்கள் கைது!




இந்திய அரசு காவிரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்க வேண்டும், நடுவண் நீர்வளத்துறை முன்மொழிந்துள்ள ஒற்றைத் தீர்ப்பாயத்தைத் திரும்பப் பெற வேண்டும், காவிரியின் குறுக்கே மேக்கேதாட்டில் கர்நாடகம் கட்டும் அணைக்கு இந்திய அரசு அனுமதி வழங்கக் கூடாது, காவிரிப் படுகையை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க வேண்டும், எரிவளி – எண்ணெய் எடுக்கும் திட்டங்களைக் கைவிட வேண்டும், உழவர்களின் அனைத்துக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும், வறட்சி நிவாரணமாக பயிர் கருகிய நிலங்களுக்கு ஏக்கருக்கு 25,000 ரூபாய் வழங்க வேண்டும், தரிசாய் போடப்பட்ட நிலங்களுக்கு 15,000 ரூபாய் வழங்க வேண்டும், இறந்து போன உழவர் குடும்பங்களுக்கு 15 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும், உழவுத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 25,000 ரூபாய் வழங்க வேண்டும், மணல் கொள்ளை யைத் தடுத்து நிறுத்த வேண்டும், நீர் ஆதாரங்களைப் பாதுகாக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன் வைத்து, தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில், 25.04. 2017 அன்று தஞ்சையில், அஞ்சல்துறை அலுவலகம் முற்றுகையிடப்பட்டது.

தஞ்சை தொடர்வண்டி நிலையம் அருகிலுள்ள அஞ்சலகத்தை முற்றுகையிடும் இப்போராட்டத்திற்கு, தமிழக விவசாயிகள் சங்கத் தஞ்சை மாவட்டத் தலைவர் திரு. த. மணிமொழியன் தலைமை தாங்கினார். தமிழக விவசாயிகள் சங்கத் தஞ்சை மாவட்டச் செயலாளர் திரு. க. செகதீசன் முன்னிலை வகித்தார்.

போராட்டத்தில் பங்கேற்ற காவிரி உரிமை மீட்புக் குழு ஒருங்கிணைப்பாளர் திரு. பெ. மணியரசன், தமிழர் தேசிய முன்னணி பொதுச் செயலாளர் திரு. அயனாபுரம் சி. முருகேசன், தமிழ்த்தேசியப் பேரியக்கத் தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் குழ. பால்ராசு, இந்திய சனநாயகக் கட்சித் தஞ்சை மாவட்டச் செயலாளர் திரு. சிமியோன் சேவியர்ராசு உள்ளிட்ட பல்வேறு அமைப்பினரையும், திரளான உழவர்களையும் காவல்துறையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட தோழர்கள் அனைவரும், திருமண மண்டபங்களில் அடைத்து வைக்கப்பட்டனர். பின்னர் மாலை விடுதலை செய்யப்பட்டனர்.

இளந்தமிழன்

# ஊர் உலகம்



அனைத்துலகப் பொருளியல் பேரவையும் (World Economic Forum), எல்லன் மேக் ஆர்த்தர் நிறுவனமும் இணைந்து நடத்திய ஓர் ஆய்வின் முடிவு, அனைத்துலக அளவில் வெளிவந்து கொண்டிருக்கும் தி கார்டியன், வாசிங்கடன் போஸ்ட், டெய்லி டெலிகிராப் போன்ற முன்னணி நாளேடுகளில் தலைப்புச் செய்தியாகி உள்ளது. “2050ஆம் ஆண்டு, கடலில் மீன்களை விட அதிக எண்ணிக்கையில் நெகிழிக் குப்பைகளே இருக்கும்“ என்பதே அந்த ஆய்வு முடிவு! ஆம். படிக்க அதிர்ச்சியாக இருந்தாலும், அதுதான் உண்மை என்கிறது, இந்த ஆய்வு!

“புதிய நெகிழிப் பொருளியல்“ என்ற தலைப்பில் நடத்தப்பட்ட அந்த ஆய்வில், பல உலக நாடுகள் கடலில் நெகிழிக் குப்பைகளை அதிகளவில் கொட்டி வருவதும், அதன் காரணமாக 2050ஆம் ஆண்டு கடலில் உள்ள மீன்களை விட நெகிழிக் குப்பைகளே (பிளாஸ்டிக் குப்பைகள்) அதிக எடையுள்ளதாக இருக்கும் என்றும் கண்டறியப்பட்டது.

உலக நாடுகளின் கழிவுகளைப் பட்டியலிட்டு, அதில் எவ்வளவு நெகிழிக் கழிவுகள் என்று வரையறுத்து, அதில் எவ்வளவு மறுசுழற்சி செய்யப்படுகின்றன என்றெல்லாம் ஆராய்ந்து, ஜார்ஜியா பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜென்னா ஜெம்பேக், யோர்க் பல்கலைக் கழகப் பேராசிரியர் கல்லம் இராபர்ட் ஆகியோர் உலகளவிலான நெகிழிக் குப்பைகளைக் கணக்கிட்டனர்.

பிரிட்டனின் “சூழலியல் - மீன்வளர்ப்பு அறிவியல் நடுவம்” என்ற அரசு நிறுவனம், 2008ஆம் ஆண்டு எடுத்த செயற்கைக்கோள் படங்களை வைத்து, உலக அளவில் மீன்களின் எடை கணக்கிடப்பட்டது.

# “கடலில் இனி மீன்களைவிட நெகிழிகளே அதிகமாக இருக்கும்!”

## அதிரவைத்த ஆய்வு முடிவு!



**நாம் பயன்படுத்தும் இந்த நெகிழிப் பொருட்களில், 70 விழுக்காட்டுப் பொருட்கள் நிலப்பகுதிகளிலும், நீர் வழித் தடங்களிலும் குப்பைகளாக வீசப்பட்டு வருகின்றன. அதில், பல மில்லியன் டன் நெகிழிக் குப்பைகளாக கடலில் மிதக்க விடப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிமிடமும் சற்றொப்ப 8 மில்லியன் டன் நெகிழிக் குப்பைகள் கடலுக்குள் செலுத்தப்படுவதும், அது மேலும் மேலும் அதிகரித்து வருவதையும் இந்த ஆய்வு வெளிப்படுத்தியது.**

இவை இரண்டையும் ஆராய்ந்து, 2050ஆம் ஆண்டு கடலில் வாழும் மீன்களின் எடை சற்றொப்ப 899 மில்லியன் டன் இருக்கும் என்றும், நெகிழிக் குப்பைகளின் எடை 850 மில்லியன் டன்னிலிருந்து 950 மில்லியன் டன் வரை இருக்கக்கூடும் எனக் கணக்கிடப்பட்டது.

கடந்த 1964ஆம் ஆண்டு உலகளவில் வெறும் 15 மில்லியன் டன் நெகிழிப் பொருட்களே உற்பத்தி செய்யப்பட்ட நிலையில், இது 2014ஆம் ஆண்டு, சற்றொப்ப 311 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது. இன்றைக்கு நடைபெற்று வரும் இந்த நெகிழிப் பொருட்களின் உற்பத்திக்காக, உலகளவில் 6 விழுக் காட்டு எண்ணெய் வளம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது, 2050ஆம் ஆண்டு சற்றொப்ப 20 விழுக் காடாக உயரக் கூடும் என்றும் கணக்கிடப் பட்டுள்ளது.

நாம் பயன்படுத்தும் இந்த நெகிழிப் பொருட்களில், 70 விழுக்காட்டுப் பொருட்கள் நிலப்பகுதிகளிலும், நீர் வழித் தடங்களிலும் குப்பைகளாக வீசப்பட்டு வருகின்றன. அதில், பல மில்லியன் டன் நெகிழிக் குப்பைகளாக கடலில் மிதக்க விடப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிமிடமும் சற்றொப்ப 8 மில்லியன் டன் நெகிழிக் குப்பைகள் கடலுக்குள் செலுத்தப்படுவதும், அது மேலும் மேலும் அதிகரித்து வருவதையும் இந்த ஆய்வு வெளிப்படுத்தியது.

மிதக்கவிடப்பட்டுள்ள இந்தக் குப்பைகள் மக்கிப் போகாமல், மீன்கள், ஆமைகள், முதலைகள் உள்ளிட்ட கடல் வாழ் உயிரினங்களுக்கும் பெரும் ஆபத்து விளை விப்பவையாக உள்ளன.

நெகிழிக் குப்பைகளை மறு சுழற்சி செய்யும் முயற்சிகளை விரைவுபடுத்தினால், ஓரளவு இந்த மாசுபாட்டைக் குறைக்க முடியும். ஆனால், அந்த முயற்சிகள் குறைவாகவே நடைபெற்று வருகின்றன. வெறும் 14 விழுக்காட்டு நெகிழிப் பொருட்கள் மட்டுமே மறுசுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்றன.

இந்த ஆய்வு முடிவு, உலகளவில் கடலில் குவிக்கப்பட்டுக் கொண்டுள்ள நெகிழிக் குப்பைகளின் அளவை வெளிப்படுத்தியதுடன், அதற்கெதிரான உலகளாவிய செயல் திட்டத்திற்கான விவாதங்களையும் எழுப்பியுள்ளது.

முடிந்தளவு நெகிழிப் பொருட்களின் பயன்பாட் டைத் தவிர்ப்பதும், பயன்படுத்திய நெகிழிப் பொருட் களை குப்பையில் வீசாமல் மறு சுழற்சியில் பயன் படுத்துவதும் அதற்கான தொழில்நுட்பங்களும் தான் இன்றைய தேவை!

●

## பாவலர் நெல்லை இராமச்சந்திரனுக்கு சிறப்பு முனைவர் பட்டம்!



தமிழ் மரபுப் பாவலர் நெல்லை இராமச்சந்திரன் அவர்களின் சமூகப்பணிகளைப் பாராட்டும் வகையில் அவருக்கு வேலூர் – புது ஜெருசலம் பல்கலைக்கழகம், சிறப்பு முனைவர் பட்டம் வழங்கி சிறப்பித்துள்ளது. கடந்த 15.04.2017 அன்று சென்னை – கோல்டுமைன் விடுதியில், பல்கலைக்கழக நிறுவனர் திரு. எஸ். சவுந்திரராசன் தலைமையில் நடைபெற்ற விழாவில், சென்னை உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி கே. சாமித்துரை இப்பட்டத்தை வழங்கினார்.

கடந்த 23.04.2017 அன்று, சென்னை த.தே.பே. தலைமை அலுவலகத்தில், பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன் அவர்கள், திரு. நெல்லை இராமச்சந்திரன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்துப் பாராட்டுத் தெரிவித்தார். பாவலர் நெல்லை இராமச்சந்திரன் அவர்களின் சமூகப்பணி தொடரட்டும்!

உரைகல்

நா. வைகறை

# பேரா. த. செயராமன் எழுதிய "மீத்தேன் அகதிகள்"




மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரியில் வரலாற்றுத் துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவரும், தமிழ்நாட்டின் தலைச்சிறந்த தமிழ்த்தேசிய சிந்தனை யாளரும், மக்களை ஈர்க்கும் வகையில் பேசக்கூடிய வல்லமை பெற்றவருமான பேராசிரியர் த. செயராமன் அவர்கள். பணி ஓய்வுக்குப் பிறகு, "மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்"பின் தலைமை ஒருங்கிணைப் பாளராக, போராட்டக் களப்பணிகளிலும், கருத்துப் பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார்.

காவிரிப்படுகையில் மீத்தேன் எரிவாயு எடுத்து, காவிரிப்படுகையை பாலை நிலமாக்கிட இந்திய அரசு எண்ணுகிறது. காவிரிப்படுகை மக்கள் 83 இலட்சம் பேரை அகதிகளாக்க இந்திய அரசு துடிக்கிறது. காவிரிப்படுகைக்கு இந்திய அரசால் நேர்ந்துள்ள இத்துயரங்களை பதிவு செய்ததோடு மட்டுமின்றி, இனி வரக்கூடிய பேராபத்துகளையும் பட்டியலிட்டு நம் நெஞ்சம் பதைபதைக்கும் வகையில் எழுதப்பட்ட நூலே "மீத்தேன் அகதிகள்" நூலாகும்.

ஆனால், "மீத்தேன் அகதிகள்" நூலைப் படிக்கும் போது நாம் ஏன் இருக்கிறோம்? எதற்காக வாழ் கிறோம், இப்படியே மன உளைச்சலுடன்தான் வாழப் போகின்றோமா, இனி என்ன செய்யப் போகிறோம்? என்று ஏராளமான வினாக்கள் எழுந்த வண்ணம் உள்ளன.

அறிவார்ந்த புள்ளி விவரங்களுடன், தேவையான இடங்களில் உள்ளத்தைத் தொடும் வகையில் உணர்ச்சி கரமாக எழுதப்பட்டுள்ள நூல், ***"மீத்தேன் அகதிகள்"***. கூடு இழந்த குருவியின் புலம்பல் போல தமிழ் இனத்தின் மீதும், காவிரிப்படுகையின் மீதும் பேராசிரியர் கொண்டுள்ள அக்கறை இந்நூலில் வெளிப்படுகிறது.

சிப்பி வயிற்றில் முத்து! இது சிப்பிக்குப் பெருமை! ஆனால், சிப்பியின் இறப்புக்கும் இதுவே காரணம்! முத்துக்களைப் பெறும் நோக்கில் சிப்பிகள் பிளக்கப் படுவதைப் போல தமிழ்நாட்டின் நிலங்கள் பிளக்கப் படுகின்றன. கனிமங்கள் சூறையாடப் படுகின்றன. வளமான வண்டல் மண் நிலம் விளையாப் பாலையாக மாறிக் கொண்டிருக்கிறது என்று சொல்லிவிட்டு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் கிடைக்கிற கனிமங்களை பட்டியலிட்டிருப்பதைப் படிக்கும்போது, திகைப்பு ஏற்படுகிறது.

காவிரிப் படுகையில் சற்றொப்ப 32 ஆண்டுகளுக்கு மீத்தேன் எடுப்பதும், பின்னர் 100 ஆண்டுகளுக்கு நிலக்கரி எடுப்பதும்தான் இந்திய அரசின் முழுத் திட்டம் என்பதை தக்க சான்றுகளுடன் இந்நூல் அம்பலப்படுத்துகிறது.

நிலக்கரி, மீத்தேன், வண்டல் பாறை (ஷேல்) மீத்தேன் ஆகியவை குறித்தும், மீத்தேன் எடுக்கப் பயன் படுத்தப்படும் நீரியல் விரிசல் முறை குறித்தும் எளிமையாக இந்நூலில் விளக்கியுள்ளார்.

"நிலத்துக்கு அடியில் 10,000 அடி ஆழம் வரை குழாயைச் செலுத்தி, பின்பு பக்கவாட்டில் குழாய்களை மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு அனைத்துத் திசைகளிலும் செலுத்தித் துளையிட்டு, பின் அவற்றின் வழியாக 13,25,000 லிட்டர் நீர் மற்றும் 9,000 டன் மணலுடன் அபாயகரமான 634 வகை வேதிப் பொருட்கள் கலந்த பிடெக்ஸ் (BTex) எனும் வேதிக்கலவையை மிக அதிக அழுத்தத்தில் உள்ளே

செலுத்தி, நிலக்கரி அல்லது வண்டல் மண் பாறையை நொறுக்கி, எரிவாயுவை விடுவித்து, கலவை நீருடன் உறிஞ்சி வெளியே கொண்டு வந்து, எரிவாயுவைப் பிரித்தெடுத்துக் கொண்டு, கழிவு நீரை நிலத்தில் பட்டுவிடாமல் கதிரவன் ஒளியில் ஆவியாகும் வகையில் குட்டையை அமைத்து, அதில் விட்டுவிடுவது என்பதுதான் நீரியல் விரிசல்முறை!" (பக்கம் 22).

இதில் பயன்படுத்தப்படும், பன்சீன், டொலுயீன், ஈத்தைல் பென்சீன், சைலின்ஸ் கலந்த கலவையே பிடெக்ஸ். இவை அனைத்தும் அபாயகரமான வேதிப்பொருட்கள்.

2013 அக்டோபர் 14லில் இந்திய அரசு ஷேல் மீத்தேன் எடுக்க இருக்கும் தன் கொள்கை முடிவை அறிவித்தது. ஓ.என்.ஜி.சி., ஆயில் இந்தியா, அம்பானியின் ரிலையன்சு உள்ளிட்ட நிறுவனங்கள் காவிரிப் படுகையை காவு வாங்கத் துடிக்கின்றன.

காவிரிப்படுகையில் மீத்தேன் எடுக்கப்பட்டால், சற்றொப்ப 83 இலட்சம் பேர் அகதிகளாக இடம் பெயர்ந்துதான் செல்ல வேண்டும் என இந்நூல் எச்சரிக்கிறது. மீத்தேன் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டால், வெளியேறும் மக்களை பேராசிரியர் த. செயராமன், "மீத்தேன் அகதிகள்" என்கிறார். தமிழர் தாயகத்தை இழந்துவிட்டால், எந்த திசையில் செல்வது எந்த மாநிலம் தமிழர்களுக்கு பாதுகாப்பானது, தமிழினத்திற்கான பாதிப்புகளை சங்கிலித் தொடர் போல பட்டியலிடுகிறார் (பக்கம் 169).

"ஆற்று நீருக்கும் நிலைத்த வாழ்க்கைக்கும் தொடர்புண்டு. வாழ்க்கைக்கும் ஒரு பண்பாட்டின் மலர்ச்சிக்கும் தொடர்புண்டு. ஓர் இனம், தன் தாயகத்தில் நிலைத்து வாழும்போது மட்டுமே. தன் இன அடையாளத்தையும் மொழியையும் பேண முடியம். தன் தாயகத்தைவிட்டு வெளியேறும்போது, தன் பண்பாட்டை இழக்கும், மொழி காணாமல் போகும். இன அடையாளம் மறைந்து போகும்" என்று தாயகத்தைக் காக்க வேண்டிய பணியை வலியுறுத்துகிற பேராசிரியர், அகதிகளாக வாழக்கூடிய மக்களின் துயரமான வாழ்வை "அண்டை நாடு அடுத்தவர் வீடு" என்ற தலைப்பில் பதிவு செய்திருக்கிறார்.

ஈழத்தமிழ் மக்களின் வாழ்வை மட்டுமின்றி, பல்வேறு தேசிய இனங்களின் அவலத்தை படம் பிடித்துக் காட்டுகிறார். உலகத்தையே குலுக்கிய மூன்று அகவைக் குழந்தை அய்லான் குர்தி படத்துடன் உள்ள செய்தி கண்ணீரை வரவழைக்கிறது!

சிரியா நாட்டின் கொம்பினி என்ற நகரிலிருந்து - போர் அழிவிலிருந்து தப்பிப்பதற்காக அப்துல்லா குர்தி, தன் மனைவி இரு மகன்கள் ஆகியோரை உள்ளடக்கிய தன் குடும்பத்துக்குப் புகலிடம் கேட்டு கனடாவிற்கு விண்ணப்பம் செய்திருந்தார். ஆனால் கனடா இவர்களை அகதிகளாக ஏற்க மறுத்துவிட்டது. 2015 செப்டம்பர் மாதம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள, தன் குடும்பத்துடன் படகில் ஏறி ஐரோப்பா நோக்கிப் பயணம் செய்தார் அப்துல்லா குர்தி. அவருடைய இரண்டாவது மகன்தான் அயலான். மத்தியத் தரைக்கடலைக் கடக்கும்போது, படகு கவிழ்ந்து அப்துல்லா குர்தி தவிர அவருடைய குடும்பத்தவர்கள் இறந்து போனார்கள். கரை ஒதுங்கிய 3 அகவைக் குழந்தை அயலான் குர்தியின் உடல், உலக நாடுகளின் உள்ளத்தை உலுக்கியது. (பக்கம 113). இதன் விளைவாக, 60 ஆயிரம் அகதிகளை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக் கொண்டது.

பேராசிரியரின் மேடைப் பேச்சு போலவே நகைச்சுவை, மனத்தைக் கவ்வும் எடுத்துக் காட்டுகள் நூல் முழுவதும் விரவிக் கிடக்கின்றன.

"கசாப்புக் கடையில் அறுத்துத் தொங்கவிடப்படும் ஆட்டுக் குட்டியாகத் தமிழகம். ஆட்டை அறுத்துக் காசு பார்க்கும் கசாப்புக் கடைக்காரனாக இந்திய அரசு. இறைச்சிக்காக, கால்களுக்காக, ஆட்டுத் தலைக்காக, ஆட்டு இரத்தத்துக்காக, ஆட்டுத் தோலுக்காகக் காத்திருக்கும் வாடிக்கையாளர்களாகப் பன்னாட்டு நிறுவனங்கள் பார்வையாளர்களாக நம் அரசியல் கட்சித் தலைவர்கள் பதறுபவர்களாக நாம்" (பக்கம் 13).

தான் வாழும் கூட்டை இழப்பது சிட்டுக் குருவிக்கு பெரும் இழப்பு; காட்டை வீடாகக் கொண்டு, கண்டவற்றை அறுத்துத் தின்று அதிகாரம் செய்யும் பருந்துக்கு, சிட்டுக்குருவியின் வீடு சிதைந்து போவதில், அதைச் சிதைப்பதில் என்ன வருத்தம் இருக்க முடியும்? (பக்கம் 173).

"இந்திய அரசின் இனப்பகையைத் தோலுரித்துக் காட்டுகிறார். இந்தியம் வஞ்சகமானது. இந்தியத்தை உடைத்துப் பாருங்கள். உள்ளே ஆரியம் இருக்கும். இது வேத, சமற்கிருத, பார்ப்பனிய மேலாண்மையை உள்ளடக்கியது. இந்திய அரசு என்பது உள்ளீட்டில் தமிழ் மொழிக்கும், தமிழர் அடையாளத்துக்கும் எதிரானது" (பக்கம் 173).

மீத்தேன் எதிர்ப்பு, ஐட்ரோ கார்பன் எதிர்ப்பு, காவிரி உரிமை மீட்பு ஆகிய போராட்டங்களில் ஈடுபடுவோர்க்கும், இவை பற்றி சிந்திப்போர்க்கும் மிகச்சிறந்த கருவி இந்நூல்!

**நூல் கிடைக்குமிடம்:**
புத்தகச் சோலை,
பெரியார் மாளிகை,
மஸ்தான் தெரு,
மயிலாடுதுறை - 609 001.
விலை ரூ. 150.

# பா.ச.க. பாசிசமும் பக்கவாத்திய இந்தியத்தேசியமும்



**பெ. மணியரசன்**

நரேந்திர மோடியின் ஒற்றை மைய அதிகாரக் குவியல் நடவடிக்கைகள், சாதாரணப் பார்வையாள ருக்கு ஒரு நபர் எதேச்சாதிகார நகர்வுகள் போல் தோன்றும். இந்திரா காந்தியின் ஒரு நபர் எதேச்சாதி காரம் – அதற்காக அவர் கொண்டு வந்த நெருக்கடி நிலை ஆகியவற்றை நினைவூட்டும்.

ஆனால் மோடியின் ஒற்றை மைய அதிகாரக் குவியல் – இந்தியத் துணைக் கண்டத்தை ஒற்றைத் தேசிய இனத்தேசமாக, ஒற்றை ஆரியத் தேசமாக, ஒற்றைப் பண்பாட்டுத் தேசமாக, ஒற்றை மத ஆதிக்க தேசமாக, ஒற்றை ஆட்சிமொழித் தேசமாக, ஒற்றை ஆன்மிக மொழித் தேசமாக மாற்றும் கொள்கை கொண்டது. இந்திரா காந்தியைப் போல், ஒரு நபர் அதிகாரக் குவியலாக – அதாவது ஒரு நபர் எதேச்சாதி காரமாக இல்லை.

மோடியின் நகர்த்தல்களில் – தன்னை வலுப்படுத்திக் கொள்ளும் தனிநபர் அதிகார நகர்வுகளும் உண்டு. அதேவேளை இந்தியாவின் பன்மொழி – பல இன, பல மத, பல பண்பாட்டு அடையாளங்களை வெட்டி நறுக்கி அவற்றை ஒற்றை ஆரிய இந்துத்துவா இந்தி தேசமாக மாற்றுவதே முதன்மையானது. எனவே, மோடியின் தனிநபர் அதிகாரச் சேட்டைகள் சிலவற்றை ஆர்.எஸ்.எஸ் பொறுத்துக் கொள்கிறது. தேனெடுத்துத் தருபவன் புறங்கையை நக்கத்தான் செய்வான்! மோடியை விட வாய்ப்பான – கவர்ச்சியான இந்துத்துவா அடியாள், தலைமை அமைச்சர் பதவியில் கிடைப்பது அரிது என்று ஆர்.எஸ்.எஸ். கருதுகிறது.

மோடி தலைமையில் இந்துத்வா பாசிசம் முழுவீச்சில் அரங்கேறும் என்று ஆவலுடன் ஆரிய வர்த்தக் காரர்கள் நம்புகிறார்கள். உ.பி. சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ச.க. பெற்ற பெரும் வெற்றி இந்த ஆவலை அவர்களுக்குத் தூண்டுகிறது. 2019 மக்களவைத் தேர் தலில் பா.ச.க. பெரும்பான்மை பெறும் என்று கருது கிறார்கள்.

எதிரே, அனைத்திந்தியக் கட்சியாகக் காட்சி அளிப்பது காங்கிரசுதான்! கம்யூனிஸ்ட்டுக் கட்சிகள் பெயருக்குத்தான் அனைத்திந்தியக் கட்சிகள்! மற்றபடி மூன்று மாநிலங்களில் தான் – சி.பி.எம். கட்சியின் செல் வாக்கு குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது. காங்கிரசும் கம்யூனிஸ்ட்டுக் கட்சிகளும்தான் பா.ச.க.வின் பாசிச எதிர்ப்புக் கட்சிகள்!

இந்திரா காந்தியின் எதேச்சாதிகார நெருக்கடி நிலை அறிவிப்பிற்கும் பா.ச.க.வின் பாசிசத்திற்கும் இடையே உள்ள முகாமையான வேறுபாடு – பா.ச.க.வின் பாசிசம் இந்துத்துவா என்ற சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டது; இட்லரின் சர்வாதிகாரம் நாஜிசம் என்ற சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது போல! இந்திராவின் நெருக்கடி தனிநபர் அதிகார வெறி சார்ந்தது; வழக்கமான முதலாளிய அரசியலுக் குரிய பொருளியல் கொள்கைகள் கொண்டது; அவ்வளவே!

இந்துத்துவா தனித்துவமான சித்தாந்தம்! இந்துத்துவா என்பதில் ஆரிய இன மேலாதிக்க வாதம், வர்ணாசிரமப் பார்ப்பனியம், வைதீக மதவெறி ஆகிய மூன்றும் அடங்கி யுள்ளன. இவற்றிற்கான அடிப்படை அரசியல் முழக்கம் இந்தியத்தேசியம்! இந்தியத்தேசியம் –அதற்கான தேச பக்தி ஆகியவற்றின் வழியாகத்தான் பா.ச.க. இந்துத்துவாவை முன் தள்ளுகிறது.

காங்கிரசும் கம்யூனிஸ்ட்டுக் கட்சிகளும் இந்தியத் தேசியம் என்ற அச்சில் பா.ச.க.வுடன் இணைபவை. இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள தமிழ்த்தேசியம் உள்ளிட்ட பல்வேறு தேசியங்களை, தேசிய இனங்களை மறுப்பதில் – பா.ச.க. – காங்கிரசு – கம்யூனிஸ்ட்டுக் கட்சிகளிடையே முழு ஒற்றுமை உண்டு.

இந்திய அரசமைப்புச் சட்டம் இந்தியாவைத் தேசம் என்று குறிப்பிடாமல் ஒன்றியம் என்று கூறுகிறது. ஆனால் அதற்கு மாறாக மேற்படி பா.ச.க. – காங்கிரசு – கம்யூனிஸ்ட்டுக் கட்சிகள் இந்தியாவைத் தேசம் என்று அழைக்கின்றன. இவை மூன்றும் இந்தியாவின் ஒற்றை ஆட்சி மொழியாக இந்தியை ஏற்றுக் கொள்கின்றன. "இந்தியன்" அல்லது "பாரதீயன்" என்ற பெயரில் இந்தியாவில் ஒரு தேசிய இனம் இருப்பதாக இந்திய அரசமைப்புச் சட்டம் கூறவில்லை. "இந்தியக் குடிமக்கள்" என்று மட்டுமே கூறுகிறது.

ஆனால் மேற்படி மூன்று கட்சிகளும் இந்தியன் – பாரதீயன் என்ற ஒற்றைத் தேசிய இனம் இருப்பதாகக் கூறிக் கொள்கின்றன. அதேபோல் இந்தியாவின் பழம் பெருமை என்று கூறுவதில் வேதகாலப் "பெருமிதங் களையே" இவை அடையாளப்படுத்துகின்றன.

இந்தியத்தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்ட பா.ச.க.வின் இந்துத்துவா பாசிசத்தில், பாதியைக் காங்கிரசுக் கட்சியும் கம்யூனிஸ்ட்டுக் கட்சிகளும் ஏற்றுக் கொள்கின்றன. இவை எப்படி பா.ச.க.வின் பாசிசத்தை எதிர்க்க முடியும்?

**(தொடரும்)**



# பாவலர் முழுநிலவன் கவிதைகள்

## புறப்பட்டு விட்டான் பொன்னியின் செல்வன்

குடிக்க நீரின்றி
குதிரை மயங்கிச் சரிய

வீர நாராயண ஏரியின்
கானல் அலையும் கரையில்
குப்புற விழுந்தான் வந்தியத்தேவன்

நீரின்றி பொய்க்கவில்லை–காவிரி
நீதியின்றி பொய்த்துவிட்டது

புழுதியாற்றை இனியும்
பொறுக்க முடியாதென....
பொது ஆவுடையார் கோயிலில் கிடந்த
ஒற்றை வாளை உருவிக்கொண்டு
புறப்பட்டுவிட்டான்
பொன்னியின் செல்வன்

விவசாயிகள் போராட்டம் தானே என
நீங்கள் வீட்டுக்குள் இருப்பதெல்லாம்
அண்ணாச்சி கடையில்
அரிசியும் பருப்பும்
இருப்பு உள்ளவரைதான்.....

எவ்வளவு சம்பளம் வாங்கினாலும்
பசிக்கு சோறு வேண்டுமென
நீங்கள் உணரும்போது......

எல்லா நிலமும் பிளந்துகிடக்கும்
எல்லா உழவனும் இறந்துகிடப்பான்

## பித்தம் தெளிய

காவிரி தீர்ப்பெழுதும்
காகிதத்துக்கு
மூங்கில் காடு
முந்நூறு அழித்தும்

தவணைப்படி
தண்ணீர் திறக்காமல்
திரும்பத் திரும்ப
தீர்ப்பெழுதும் திருநாட்டில்

நதிகளை இணைத்தால்
நாலு போகம் விளையும் என்போர்
பித்தம் தெளிய
சித்த மருத்துவம்
சிறந்ததெனக் கொள்க

பேராசிரியர் இரா. கிருஷ்ணமூர்த்தி

# படிக்கட்டுகளாக திகழும் படிப்புகள்

1



கல்வியே சமூக மாற்றத்திற்கான திறவு கோல் என்று கூறலாம். இன்றைய தொழில் நுட்ப யுகத்தில், “வானமே எல்லை“ என்று கூறும் அளவிற்கு இளைஞர்களுக்கு கல்வி, வேலை மற்றும் தொழில் வாய்ப்புகள் பரவிக் கிடக்கின்றன.

மருத்துவம், துணை மருத்துவம், கால்நடை மருத்துவம், பல் மருத்துவம், வேளாண்மை, வனவியல், மீன் வளம், பொறியி யல், கலை, அறிவியல், கல்வியியல், மேலாண்மை, சட்டம், நூலக அறிவியல், உணவக வேளாண்மை, சுற்றுலா, இதழியல், வடிவமைப்பு, நுண்கலை, நிதி மற்றும் கணக்கியல், சமூகப்பணி, மனை யியல், விளம்பரத் துறை, மொழியியல், மானுடவியல், பொதுத் தொடர்பு, காப்பீடு, வங்கியியல், உடற்கல்வி, மறுவாழ்வியல், அழகுக்கலை, சுற்றுச்சூழல், பேரிடர் மேலாண்மை, உணவு பதப்படுத்தல், உளவியல், உடற் கல்வி, காட்சி ஊடகவியல் போன்ற பலதுறைகளில் உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் வளமாக உள்ளன. தொழில் முனைவோர் ஆக விரும்பும் இளைஞர்களுக்கும் ஏற்ற பல்வேறு படிப்புகள், இங்கே தாராளமாக வழங்கப்படுகின்றன.

ஆனால் நம் மக்களின் மனங்கள் சுருங்கி, சில குறிப்பிட்ட துறைகளில் மட்டுமே, வளர்ச்சி இருப்பதாக கருதி, அனைவருமே அந்த துறைகளில் சேர போட்டி யிடுவதுதான், தற்போதைய அடிப்படைச் சிக்கலாக உள்ளது.

கல்வி பெருமளவில் வணிகமயமாகிவிட்ட இன்றையச் சூழலில் தனி மனித முன்னேற்றத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் பயனளிக்கும் கல்வியைப் பயில வேண்டியது மிக அவசியமாகிறது. ஒவ்வொரு தனி மனிதருக்குள்ளும், அவருக்கேயுரிய தனித்திறன்கள் மற்றும் விருப்பங்கள் இருக்கும்.

முதலைக்கு தண்ணீரில் தான் பலம் அதிகம் என்பதைப்போல அவரவருக்கும் விருப்பமான துறைகளில் படித்தால், வாழ்வில் மிகச் சிறப்பாக வர முடியும். எனவே வாழ்வில் வெற்றி என்பது வேலைவாய்ப்புள்ள துறையைத் தேடுவதில் இல்லை; தமக்கு விருப்பமான துறையில், அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதில் தான் உள்ளது.

பரிதாபத்திற்குரிய செய்தி என்னவென்றால், இன்றைய பெற்றோர்களும், மாணவர்களும், “எத்தைத் தின்றால் பித்தம் தெளியும்?” என்பதைப் போல, எந்த படிப்பை, எந்த கல்லூரியில் படித்தால் அதிக ஊதியத்தில் வேலை

கிடைக்கும் என்பதை மட்டுமே கொண்டு, உயர்கல்வியைத் தெரிவு செய்கின்றனர். உயர்கல்வியைத் தேர்வு செய்திட, மாணவரின் தனித் திறன் மற்றும் விருப்பம், குறிப்பிட்ட உயர்கல்வியில் சேர்வதற்கான தகுதி, அந்த மாணவரின் குடும்ப, சமூக, பொருளாதார சூழல், அந்த படிப்பை முடித்த பின் மேற்கொண்டு படிக்கவும் ஆராய்ச்சி செய்திடவும் கூடிய வாய்ப்புகள், வேலை வாய்ப்புகள் மட்டுமின்றி தாமாகத் தொழில் தொடங்கி நடத்துவதற்கான வாய்ப்புகள், போன்ற பல்வேறு காரணிகள் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

இந்தச் சமூகத்தில் தனிமனிதர் ஒரு கூறு. இங்கு நாம் ஒருவரை ஒருவர் சார்ந்துதான் வாழ இயலும். எனவே எல்லோருடைய பங்களிப்புமே சமமான அளவில் இந்தச் சமூகத்திற்கு தேவைப்படுகிறது. எனவே சில துறைகளே உயர்ந்தவை என்ற சமூகத்தின் மனத்தடையை உடைத்து, மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான துறைகளில் படிக்க வேண்டும்.

விருப்பமான துறையில் அர்ப்பணிப்புடன் பணி யாற்றுவது மட்டுமின்றி மனித நேயத்துடன் செயலாற்ற வேண்டும். ஐஸ்வர்யாராய்களை விட அன்னை தெரசாக்களே அழகானவர்கள். தற்போது அவர்களே அதிகம் தேவைப்படுகிறவர்கள்.

பெற்றோர் தாங்கள் மட்டுமே உழைத்து தம் பிள்ளைகளை உயர்த்தி விட்டதாக இறுமாப்பு கொள்வதில்தான், மனித நேயமும், சமூக சிந்தனையும் அற்றுப் போய் முழுமையாக நுகர்வு சிந்தனையு டனையே, தம் பிள்ளைகளை உயர்கல்விக்கு செலுத்து கிறார்கள். “தம் பிள்ளைகளின் உணவுக்காக உழைத்த விவசாயி, உடையளித்த நெசவாளி மற்றும் தையற் தொழிலாளி, பயிற்றுவித்த ஆசிரியர், சிகிச்சை யளித்த மருத்துவர், பள்ளிக்கு அழைத்துச் சென்ற ஓட்டுநர் புத்தகம் அச்சிட்டு வழங்கியவர்“, என ஆயிரக் கணக் கான மக்கள் உழைப்பில் தான் அந்தக் குழந்தை கள் மட்டுமின்றி நாமும் சமூகத்தில் வளர்ந்திருக் கிறோம் என்பதை உணர்ந்தால், அந்த சமூத்திற்கு நாம் பங்களிக்க வேண்டியது, வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தும் கடமையே என்பதையும் புரிந்து கொள்ள லாம்.

எனவே அவ்வாறான சமூக மாற்றத்திற்கான மற்றும் தனி மனித முன்னேற்றத்திற்கான உயர் படிப்புகள் என்ன? அவற்றை எங்கு படிக்கலாம்? அதற்கான தகுதிகள் என்ன? போன்ற தகவல்களை இப்பகுதியில் வழங்கிட முனைகிறோம்.

வாருங்கள்! சேர்ந்துழைப்போம்!

*(வாய்ப்புகள் வளரும்)*

•

# உன்னைப் பாடுவேன்

*(குழந்தைகளைக் கொஞ்ச ஒரு தமிழக் கொஞ்சுமொழி)*

**பாவலர் ப. மாதேவன்**

உறைந்து கிடந்த உள்ளத்தை
நெருப்பின்றிச்
சிரிப்பெடுத்து உருக்குகிறாய்.
மெல்லக் கரைகிறேன் நான்.
சின்ன விரல்கொண்டு
சீராய் எனை வார்த்து
முன்னர் நிலை செய்தாய்.
அதனால் இன்று
உன்னைப் பாடுவேன்.

குமரிமக்கள் வாழ்வியலே
கொடுந்தமிழின் பேரறமே
குறள்பிறந்த பேரறிவே
புறத்தின் பொருட்செறிவே

அன்பின் அகப்பாட்டே
ஐம்பெருங் காப்பியமே
பதிணெண் கீழ்க்கணக்கே
பழகுதமிழ்ப் பத்துப்பாட்டே

உறையூர் மென்துகிலே
மறைமலைத் தனிமொழியே
பாண்டிய நன்முத்தே
பாவாணர்த் தமிழ்ச்சொல்லே

சேரமான் குறுமிளகே பெருஞ்
சித்திரனார்ப் பாவீச்சே
கீழடியின் நன்மணியே
கிஆபெ குறள்விரிவே

தென்மொழித் திரவியமே
சிந்துத் தமிழறிவே
சுமேரியச் சொற்கூட்டே
சொல்பிறந்த நல்லுலகே

மயக்கும் பறையொலியே
மாண்புறு தமிழிசையே
பண்ணே பழந்தமிழே – இன்று
உன்னைப் பாடிடுவேன்.

# காவிரித்தாய் காப்பு முற்றுகைப் போராட்டத்தில்

## தமிழ்த்தேசியப் பேரியக்கத் தோழர்கள்

காவிரித் தீர்ப்பாயத்தைக் கலைக்க ஆணையிடும் வகையில் இந்திய அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஒற்றைத் தீர்ப்பாயத்திற்கான சட்டத் திருத்தத்தை திரும்பப் பெற வேண்டும், ஒருவேளை ஒற்றைத் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டால் அதில் விசாரணைக்குக் காவிரி வழக்கை அனுப்பக் கூடாது, காவிரி மேலாண்மை வாரியம் உடனடியாக அமைக்க வேண்டும், மேக்கேத்தாட்டில் கர்நாடக அரசு புதிய அணை கட்ட இந்திய அரசு அனுமதிக்கக் கூடாது, தமிழக உழவர்களுக்கு முழுமையான வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து, தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத் தின் முன்பு, கடந்த மார்ச்சு 28 அன்று தொடங்கி - காவிரி உரிமை மீட்புக் குழுவினர் இரவு பகலாக - பத்தொன்பது நாட்கள் நடத்தி வந்த தொடர் அறப்போராட்டம், 15.04.2017 அன்று நிறைவடைந்தது.

போராட்டத்தில், காவிரி உரிமை மீட்புக் குழுவில் உறுப்பு வகிக்கும் தமிழக விவசாயிகள் சங்கம், தமிழர் தேசிய முன்னணி, விடுதலைத் தமிழ்ப்புலிகள், இந்திய சனநாயகக் கட்சி, மனித நேய சனநாயகக் கட்சி உள்ளிட்ட அரசியல் அமைப்புகளும், உழவர் அமைப்புகளும், இளைஞர்களும் பங்கேற்றனர்.

போராட்டம் நடைபெற்ற பத்தொன்பது நாட்களிலும் தமிழ்த்தேசியப் பேரியக்கத் தோழர்கள் வெவ்வேறு பகுதிகளிலிருந்து வந்து போராட்டத்தில் பங்கேற்றனர்.





போராட்டத்தின் முதல் நாளான 28.03.2017 அன்று, தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி, வேதாரணியம் பகுதி தோழர்களும், 29.03.2017 அன்று சென்னை, புதுச்சேரி, பெண்ணாடம், சிதம்பரம், காட்டுமன்னார் குடி, சீர்காழி, ஓசூர், கிருட்டிணகிரி, தருமபுரி, கோவை, ஈரோடு மாவட்டத் தோழர்களும், 30.03.2017 அன்று திருச்சி, மதுரை, திருச்செந்தூர், புளியங்குடி தோழர்களும் போராட்டத்தில் பங்கேற்றனர்.



பின்னர் சுழற்சி முறையில் வெவ்வேறு நாட்களில் தோழர்கள் தொடர்ந்து வந்த அனைத்து நாட்களிலும் திரளாகப் பங்கேற்றனர்.

தமிழ்த்தேசியப் பேரியக்கம் சார்பில், பொதுச் செயலாளர் தோழர் கி. வெங்கட்ராமன், பொருளாளர் தோழர் அ. ஆனந்தன், தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் குழ. பால்ராசு, மாநகரச் செயலாளர் தோழர் இலெ. இராமசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தோழர் பழ. இராசேந்திரன், நா. வைகறை, க. விடுதலைச்சுடர், இரெ. இராசு, கோ. மாரிமுத்து, க. முருகன், பொதுக் குழு உறுப்பினர்கள் தோழர் கதிர்நிலவன், திருச்சி மூ.த. கவித்துவன், குடந்தை தீந்தமிழன், தஞ்சை இரா.சு. முனியாண்டி, பாவலர் இராசாரகுநாதன், பூதலூர் ஒன்றியச் செயலாளர் தோழர் அ. தேவதாசு, வல்லம் செயலாளர் தோழர் சி. முருகையன், செங்கிப்பட்டி தோழர்கள் ப.வு. சண்முகம், ஆனந்த், செயராஜ், மணிகண்டன், தஞ்சை மாநகரத் தோழர்கள் பன்னீர்ச்செல்வம், அண்ணா துரை, சீனிவாசன், குடந்தை தோழர்கள் பிரபு, செந்தமிழன், முத்துக்குமார் உள்ளிட்டோர் வெவ்வேறு நாட்களில் போராட்டப்பந்தலிலேயே தங்கி போராட்டத்தில் பங்கேற்றனர்.

மயிலாடுதுறை பெரியசாமி, சென்னை பழ.நல். ஆறுமுகம், காஞ்சிபுரம் நடராசன், புளியங்குடி க. பாண்டியன், ஈரோடு வெ. இளங்கோவன், புதுச்சேரி வேலுச்சாமி, சிதம்பரம் எல்லாளன், பெண்ணாடம் கனகசபை, திருச்செந்தூர் மு. தமிழ்மணி, அரியலூர் மேலமைக்கேல்பட்டி வடிவேலன், சீர்காழி கோ. நடராசன், இராசராசன் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பேரியக்கச் செயல்பாட்டாளர்கள், அவரவர் பகுதி தோழர்களுடன் போராட்டத்தில் பங்கேற்றனர். ஓசூரிலிருந்து திரு. வனமூர்த்தி தலைமையில் மைலான் நிறுவனத் தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

மகளிர் ஆயம் தமிழ்நாடு ஒருங்கிணைப்பாளர் தோழர் மதுரை அருணா, நடுவண் குழு உறுப்பினர் தோழர் ம. இலட்சுமி, திருச்சி தோழர் வெள்ளம்மாள் ஆகியோர் அனைத்து நாட்களிலும் போராட்டத்தில் பங்கேற்றனர். தஞ்சை தோழர்கள் தமிழினி, இராசப்பிரியா, சரசுவதி,பெண்ணாடம் வித்தியா, ஓசூர் வழக்கறிஞர் பாக்கிய லட்சுமி உள்ளிட்ட திரளான மகளிர் தோழர்கள் வெவ்வேறு நாட்களில் பங்கேற்றனர்.

போராட்டம் குறித்து செங்கிப்பட்டி, பூதலூர் பகுதிகளில் மாணவர்களும் இளைஞர்களும் பரப்புரை மேற்கொண்டனர். தமிழக இளைஞர் முன்னணித் தோழர் குழ.பா. ஸ்டாலின் இதற்கான பணிகளை ஒருங்கிணைத்தார்.






# சென்னை இந்திப் பிரசார சபை முன்பாக இந்தித் திணிப்பு ஆணை எரிப்புப் போராட்டம்!

## தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைமைச் செயற்குழு தீர்மானம்!

தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் தலைமைச் செயற்குழுக் கூட்டம், சென்னையில் 22.04.2017 அன்று காலை முதல் மாலை வரை நடைபெற்றது. கூட்டத்திற்கு, பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன் தலைமை தாங்கினார். பொதுச் செயலாளர் தோழர் கி. வெங்கட்ராமன் முன்னிலை வகித்தார். பொருளாளர் தோழர் அ. ஆனந்தன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தோழர் குழ. பால்ராசு, பழ. இராசேந்திரன், நா. வைகறை, கோ. மாரிமுத்து, இரெ. இராசு, க. விடுதலைச்சுடர், க. முருகன், க. அருணபாரதி உள்ளிட்டோர் பங்கேற்றனர். கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஒருமனமாக நிறைவேற்றப்பட்டன :

***தீர்மானம் : 1***

**இந்தித் திணிப்பு ஆணை எரிப்புப் போராட்டம் சென்னை இந்திப் பிரசார சபை முன்பாக!**

இந்தியக் குடியரசுத் தலைவர், தலைமை அமைச்சர், நடுவண் அமைச்சர்கள் உள்ளிட்ட தலைவர்களும், மற்றவர்களும் அவர்களுக்கு இந்தியில் பேசவும், எழுதவும் தெரிந்தால், இனி அவர்கள் நாடாளுமன்றத்திலும், வெளியில் பொது நிகழ்வுகளிலும் இந்தியில் மட்டுமே பேசவேண்டும் என்றும், நாடாளுமன்றத்தில் எழுத்து வடிவில் அளிக்கும் விடைகளை, இந்தியில் மட்டுமே அளிக்க வேண்டும் என்றும் இந்திய அரசு ஆணையிட்டுள்ளது.




மேலும், இந்தியா முழுவதும் அனைத்துவகைப் பள்ளிக் கல்வியிலும் (மாநில அரசுப் பாடத்திட்டக் கல்வி உட்பட), ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை இந்தி ஒரு கட்டாயப் பாட மொழியாக இருக்க வேண்டும், முதல் கட்டமாக நடுவண் பள்ளிக் கல்வி வாரியப் (சி.பி.எஸ்.இ.) பள்ளிகளிலும் கேந்திரியா வித்தியாலயாப் பள்ளிகளிலும் இது கட்டாயமாக்கப்படும், அடுத்து மாநில அரசுப் பள்ளிகளிலும் பத்தாம் வகுப்பு வரை இந்தி மொழியைக் கட்டாயமாக்குவது பற்றி நடுவண் அரசு எல்லா மாநில அரசுகளுடனும் விவாதிக்க வேண்டும் என்றும் இந்திய அரசு அறிவித்துள்ளது.

மேற்கண்ட புதிய ஆணைகள், கடந்த 2011ஆம் ஆண்டு (02.06.2011), நடுவண் அரசில் காங்கிரசு - தி.மு.க. கூட்டணி ஆட்சி நடந்த போது, நிதியமைச்சராக இருந்த ப. சிதம்பரம் தலைமையில் இயங்கிய “அலுவல் மொழிக்கான நிலைக்குழு“வின் (Committee of Parliament on Official Language) பரிந்துரைகளே! அப்பரிந்துரைகளை ஆறாண்டுகள் கழித்து இப்போதுள்ள பா.ச.க. அரசு ஏற்றுச் சட்டமாக்கியுள்ளது.




இந்திய அரசில் காங்கிரசு இருந்தாலும், பா.ச.க. இருந்தாலும், அது இந்தித் திணிப்பை தொடரும் என்பதற்கு இதுவே தக்க சான்றாகும்.

இந்திய அரசின் இந்த இந்தித் திணிப்பை எதிர்த்து, தமிழ்த்தேசியப் பேரியக்கப் பொதுச்செயலாளர் தோழர் கி. வெங்கட்ராமன் தலைமையில், வரும் மே 8 அன்று, சென்னை தியாகராயர் நகரிலுள்ள இந்திப் பிரச்சார

சபை முன்பு குடியரசுத் தலைவர் கையொப்பமிட்ட இந்தித் திணிப்பு ஆணையின் நகலை எரிக்கும் போராட்டத்தை தமிழ்த்தேசியப் பேரியக்கம் முன்னெடுக்கவுள்ளது. இப்போராட்டத்தில் தமிழ் மக்களும், இளைஞர்களும், இன உணர்வாளர்களும் பெருந்திரளாகப் பங்கேற்க வேண்டுமென வேண்டுகிறோம்.

**தீர்மானம் : 2**

**காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்தி ஏழு நாட்கள் தொடர்வண்டி மறியல் போராட்டம்!**

காவிரித் தீர்ப்பாயத்தைக் கலைக்க ஆணையிடும் வகையில் இந்திய அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் வைத்துள்ள, ஒற்றைத் தீர்ப்பாயத் திற்கான சட்டத் திருத்தத்தை திரும்பப் பெற வேண்டும், காவிரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்க வேண்டும், மேக்கேத்தாட்டில் கர்நாடக அரசு காவிரியைத் தடுத்து அணை கட்ட இந்திய அரசு அனுமதிக்கக் கூடாது, தமிழக உழவர்களுக்கு முழுமை யான வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து, கடந்த மார்ச்சு 28 முதல் ஏப்ரல் 15 வரை தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவல கத்தின் முன்பு, காவிரி உரிமை மீட்புக் குழுவினர் இரவு பகலாக நடத்திய தொடர் அறப்போராட்டத்தின் அடுத்த கட்டமாக, காவிரி டெல்டா மாவட்டங்களில் வரும் மே 15 முதல் ஒரு வார கால தொடர்வண்டி மறியல் போராட்டம் நடைபெறவுள்ளது.

இப்போராட்டத்தில், தமிழ்த்தேசியப் பேரியக்கத் தோழர்கள் பெருந்திரளாகப் பங்கேற்பது என்றும், காவிரி டெல்டா மாவட்டங்களில் இதற்காக விரிவான அளவில் பரப்புரைகள் மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் : 3**

**மருத்துவ மேற்படிப்பில் அரசு மருத்துவர்களுக்கு தொடர்ந்து 50% இட ஒதுக்கீடு வழங்க வேண்டும்!**

கடந்த 30 ஆண்டுகளாக, தமிழ்நாட்டில் மருத்துவ மேற்படிப்பில் அரசு மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 50 விழுக்காட்டு இட ஒதுக்கீட்டை, இந்திய மருத்துவக் கவுன்சில் வகுத்துள்ள விதிகளைக் காரணம் காட்டி, கடந்த 17.4.2017 அன்று சென்னை உயர் நீதிமன்றம் நீக்கித் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இதன் காரணமாக, தமிழ்நாட்டின் மருத்துவக் கல்லூரிகளில் பல்வேறு பிரிவுகளில் மருத்துவ மேற் படிப்பிற்கான 1,225 இடங்களில் சேருவதற்கான வாய்ப்பு கிராமப்புறங்களிலும், மலைக் கிராமங்களிலும், மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும் பணி யாற்றும் அரசு மருத்துவர்களுக்குக் கிடைக்காமல் போகும் ஆபத்து உருவாகியுள்ளது. இதற்கெதிராக, அரசு மருத்துவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு, உடனடியாக இதில் தலையிட்டு, தமிழ்நாட்டின் மருத்துவ மேற்படிப்பில் நடப்பிலுள்ள 50 விழுக்காட்டு இட ஒதுக்கீட்டை உறுதி செய்யும் வகையில் அவசரச் சட்டம் இயற்ற வேண்டும். அதற்கு, இந்திய அரசின் ஒப்புதலைப் பெற அரசியல் நடவடிக் கையிலும் இறங்க வேண்டும்.

மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையில் நீட் தேர்வு தேவையில்லை என தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள சட்ட முன்வடிவுக்கு, குடியரசுத் தலைவர் ஏற்பிசைவு வழங்க வேண்டும்.

**தீர்மானம் : 4**

**கீழடி ஆய்வாளர் அமர்நாத் குழுவினரை அசாமிற்கு இடமாற்றம் செய்ததை இந்திய அரசு கைவிட வேண்டும்!**

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர் நாகரிகத்தின் வரலாற்றுச் சான்றாக கிடைத்திருப்பது சிவகங்கை மாவட்டம் கீழடி அகழாய்வு. இந்த அகழாய்வைத் தொடர்வதற்குத் இந்திய அரசு தொடர்ந்து முட்டுக்கட்டைகள் போட்டுக் கொண்டே வந்தது.

முதல்கட்ட அகழாய்வு 2015 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இரண்டாம் கட்ட அகழாய்வு 2016 ஆம் ஆண்டு தொடர்ந்தது. ஆனால் அது முடிந்தபின் மூன்றாம் கட்ட அகழாய்வை இயல்பாகத் தொடங் காமல் இந்தியத் தொல்லியல் துறை தடுத்து வைத் திருந்தது. பல்வேறு தமிழ் அறிஞர்களும், தமிழின அமைப்புகளும் குரல் கொடுத்தபின் மூன்று மாதம் தாமதித்து மூன்றாம் கட்ட அகழாய்வைத் தொடங் கியுள்ளது.

இந்நிலையில் கீழடி அகழாய்வுக்கு இன்னொரு சிக்கல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மூன்றாம் கட்ட அகழாய்வுக்கு மிகத் தாமதமாக இந்திய அரசு அனுமதி வழங்கிய நிலையில், கடந்த மார்ச் மாத இறுதியில், திடீரென்று இந்தியத் தொல்லியல் துறையால் - இந்த அகழாய்வில் தொடர்ச்சியாக தமிழ் ஆர்வத்துடன் ஆய்வுப்பணி செய்து வந்த திரு. அமர்நாத் இராம கிருஷ்ணன் அசாமுக்கு பணியிட மாற்றம் செய்யப் பட்டார். இதை எதிர்த்து நடுவண் நிர்வாகத் தீர்ப் பாயத்தில் முறையீடு செய்தார் அமர்நாத். தீர்ப்பாயமும், அமர்நாத் ராமகிருஷ்ணாவை கீழடியிலேயே பணியாற்ற அனுமதிக்கக் கோரி இந்தியத் தொல்லியல் துறைக்கு பரிந்துரை செய்திருந்தது.

இந்நிலையில் 21.04.2017 அன்று, இந்தியப் பண் பாட்டுத்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் நடுவண் தொல்லியல்துறை, சென்னைக்கு பணியிட மாறுதல் கோரியிருந்த அவரது வேண்டுகோளையும் நிராகரித்து அமர்நாத் இராமகிருஷ்ணாவை அசாம் மாநிலம் கவுகாத்திக்கு பணியிட மாறுதல் செய்ததை உறுதி செய்து கடிதம் வழங்கியுள்ளது. இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையை வெளிப்படுத்தும் கீழடி ஆய்வுக்குத் தடை ஏற்படுத்தும் உள்நோக்கம் கொண்ட நடவடிக்கை இது!

இந்திய அரசு, உடனடியாக திரு. அமர்நாத் அவர்களின் பணியிடமாற்றத்தைத் திரும்பப் பெற்று, அவரையும் அவரது குழுவினரையும் தொடர்ந்து கீழடியிலேயே ஆய்வு செய்ய ஆணையிட வேண்டும். •








# செயலலிதா, கருணாநிதி களத்தில் இல்லாமை பெருஞ்சுமை நீக்கமே!

தமிழர் கண்ணோட்டம் இதழின் கட்டுரைகளும், பாக்களும், செவ்விகளும், ஆசிரியவுரைகளும் தமிழினத் தின் மீட்சிக்கானப் போர்ப்பறையாக ஒலிக்கின்றன.

மேலும் சந்தர்ப்பவாத அரசியலை முன்வைக்கும் தலைமையை எவ்விதச் சமரசமின்றியும், தருக்கபூர்வமாகவும் திறனாய்வு செய்யும் தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் பணிகள் பயனுள்ளவையாகும்.

மார்ச் 16 - 31 இதழில், "திராவிட இயக்க ஆட்சி 50" குறித்த இதழாசிரியர் பெ.ம. அவர்களின் கட்டுரை, திராவிட இயக்கம் - தனது சுயலாபங்கள் கருதி - மக்களிடமிருந்து விலகியதையும், மொழிக் கொள்கை, இனக்கொள்கை, கல்விக் கொள்கைகளில் தமிழின விரோத தீய ஆற்றலாக மாறிய வரலாற்றையும் செறிவாக எடுத்தியம்புகிறது.

அதன் உச்சமாக மு.க.வின் தமிழினத் துரோகச் செயலான ஈழத்தமிழர் அழிப்புக்கு உடந்தையாக இருந்ததைக் கண்டுதான், இளவயது தமிழர்கள், மு.க.வையும், தி.மு.க.வையும் முற்றாகப் புறக்கணித்தனர் என்பது உண்மை! அண்ணாவின் தலைமுறையைச் சேர்ந்த, அன்றைய தி.மு.க. தொண்டர்களோ அவர்தம் வாரிசுகளோ இன்று தி.மு.க.வின் கொள்கைகளையோ, அரசியலையோ விரும்பாமல் விலகி நிற்கின்றனர் என்பதும் உண்மை!

தமிழ்த்தேசியம் ஒன்றே தமிழர்களின் தன்னுரிமைக்கு வழிகோலும் என்பதைப் புரிந்து கொள்ளும் விதமாகவே, "தைப்புரட்சி" நடந்தது.

ஏப்பிரல் 1 - 15 இதழில், மொழியுரிமை, உழவர்களின் சிக்கல்கள், ஆற்று நீர் உரிமைகள் குறித்தும் கட்டுரைகளும் செய்திகளும் வெளியாகி இருப்பது பாராட்டுக்குரியது.

"நிலவுகின்ற அரசியல் குழப்பம், தெளிவிற்கான முதல் நிலையே" ஆசிரியவுரை நன்று! செயலலிதாவும் கருணாநிதியும் அரசியல் களத்தில் இல்லாமை வெற்றிடமல்ல, அது உண்மையில் பெருஞ்சுமை நீக்கமே. அவர்களது பாசாங்கான முகங்களும், முழக்கங்களும் தமிழகத்தின் சாபக்கேடாகவே விளங்கின.

காவிரி, முல்லைப் பெரியாறு, கச்சத்தீவு விடயங்களில் தமிழ்நாட்டுக்கும், தமிழக உழவர்களுக்கும் மாறாத் துரோகங்களைச் செய்தவர்களில் முதன்மையானர்கள் அவர்களே என இளைய சமுதாயத்தினரின் முன்பு அம்பலமாகியும் உள்ளனர்.

பா.ச.க. தங்களது அனைத்து விதமான செயல்பாடுகளையும் பயன்படுத்தி, தமது வல்லாண்மையை நிலைநாட்ட முயல்கிறது. தமிழ்நாட்டில் நிலவுகின்ற அரசியல் போதாமையைப் பயன்படுத்தும் முயற்சிகளுக்கு எதிர்வினை ஆற்ற வேண்டியது நமது கடமையாகும்!

வெகு மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு, தமிழ்த் தேசிய ஆற்றல்கள், பொது நோக்கில் ஒருமித்த குரல் எழுப்ப வேண்டும்.

"அணை உடையட்டும், அறம் நிலைக்கட்டும்" என்ற பாவலர் மு.த. கவித்துவன் அவர்களின் கவிதை, அறச்சீற்றத்தின் வெளிப்பாடு! பெருமழை நம்மை வீழ்த்திவிடும், நிறை மழையொன்றே வாழ்விக்கும்!

**- கதிர்மதி,** *திருச்சி.*


Owned and Published by P.Maniarasan from 21, 1st Street, 1st Sector, Kalaignar Karunanidhi Nagar, Chennai- 600 078 and printed by T.Muthukumar at Print Faast, 53/1,Orandiamman Koil Street,Velachery, Chennai-600042, Editor: P. Maniarasan

# காவிரி உரிமைக்காகப் போராடிய ஒசூர் அசோக்லேலேண்ட் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு வழக்குப்பதிவு!

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும், ஒற்றைத் தீர்ப்பாயத்தை இந்திய அரசு கைவிட வேண்டும், உழவர்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன் வைத்து, தமிழ்த்தேசியப் பேரியக்கப் பொதுச் செயலாளர் தோழர் கி. வெங்கட்ராமன் தலைமையில் இயங்கி வரும், ஒசூர் அசோக் லேலேண்ட் அலகு - 2 தொழிற்சங்கத் தொழிலாளர்கள் கடந்த 25.04.2017 அன்று வேலை நிறுத்தம் செய்தனர். ஒசூரில், இந்திய அரசு வருமான வரித்துறை அலுவலகத்தை முற்று கையிடும் போராட்டமும் நடத்தினர்.

தொழிற்சங்கப் பொதுச் செயலாளர் தோழர் நா. புருசோத்தமன் தலைமையில் நடைபெற்ற இப்போ ராட்டத்தில், ஆலையிலிருந்து இரு சக்கர ஊர்திகளில் திரளாக வந்த தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டம் நடத்திய தோழர்களை காவல்துறை கைது செய்ய ஊர்திகளில் வந்தனர். நூற்றுக்கணக் கானோர் பங்கேற்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக் கொண்டிக்கும்போதே காவல்துறையினர் தோழர் களை வலுக்கட்டாயமாக இழுத்து ஊர்திகளில் ஏற்ற முற்பட்ட தால் தொழிலாளர்களுக்கும் காவல்துறை அதிகாரிகளுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு தள்ளு முள்ளு ஏற்பட்டது. பின் தோழர்கள் பலவந்தமாக கைது செய்யப்பட்டு மண்டபத்தில் அடைத்து வைக்கப் பட்டு, மாலை விடு விக்கப்பட்டனர். காவல்துறையினர் அனைவர் மீதும், இருபிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர்.

கருநாடக காவல்துறை தமிழர் எதிர்ப்புணர்வோடு கன்னடவெறியோடு தமிழர் மீது அடக்குமுறையை ஏவுகிறது. தமிழ்நாட்டின் எல்லை நகரமான ஒசூரில், அதே மனப்போக்குடன், தமிழ்நாட்டில் நடைபெறும் சனநாயக வழிப் போராட்டங்களை தமிழ்நாட்டுக் காவல்துறை ஒடுக்குவது வெட்கக்கேடானது!






# காரல்மார்க்சு நூலகம் கண்ணன் காலமானார்!

காரல் மார்க்சின் பெயரில் நூலகம் அமைத்து, மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பேருதவி செய்து வந்தவரும், மார்க்சிய சிந்தனையாளருமான பொறியாளர் ச.சீ. கண்ணன் அவர்கள், கடந்த 25.04.2017 அன்று சென்னையில் அவரது இல்லத்தில் காலமானார். அவருக்கு அகவை 94. திரு. ச.சீ. கண்ணன் அவர்கள், மூத்த கல்வியாளரும், மார்க்சிய சிந்தனையாளருமான திரு. ச.சீ. இராசகோபாலன் அவர்களது அண்ணன் ஆவார்.

1920களில் தஞ்சை மாவட்டம் - பாபநாசத்தில் பிறந்த திரு. கண்ணன், கோவையில் பள்ளிக்கல்வியைப் படித்தார். 1940இல் பனாரஸ் பல்கலைக்கழகத்தில் பொறியியல் படித்துக் கொண்டிருந்த போது, அனைத் திந்திய மாணவர் பெருமன்றத்தில் இணைந்து இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார். பின்னர், பொதுவுடைமைக் கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்டு, கம்யூனிஸ்ட் கட்சியிலும் இணைந்தார்.

இந்திய விடுதலைக்குப் பிறகு, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மின்துறைப் பொறியாளராகப் பணியாற்றிய திரு. கண்ணன், தொழிற்சங்கக் களத்திலும் தொடர்ந்து செயல்பட்டு வந்தார். தமிழ்நாடு மின்துறைப் பொறியாளர் சங்கத்தின் தலைவராக அவர் பணியாற்றினார்.

ஓய்வு பெற்ற பின் 1980களில், சென்னை சி.ஐ.டி. நகரில், ஆய்வாளர் எஸ்.வி. இராசதுரை அவர்களின் துணையோடு, "காரல் மார்க்ஸ் நூலகம்" ஏற்படுத்தி, பல அரிய நூல்களையும், மார்க்சிய இதழ்களையும் அவர் பல்வேறு சிரமங்களுக் கிடையே பாதுகாத்து வந்தார். சோவியத் ஒன்றிய நூல்களும், மார்க்சிய சிற்றிதழ்களும் அவற்றுள் முகாமையானவை. மாணவர்களுக்கும், மார்க்சிய சிந்தனையாளர்களுக்கும் அந்நூலகம் சிறந்த ஆய்வுக் களமாக விளங்கியது.

பார்வையற் றோருக்குத் தொடர்ச்சியாக அவர் செய்த பணிகள் குறிப்பிடத்தக்கவையாகும். நூலகத்துக்கு வரும் பார்வையற்றோருக்கு நூல்களை திரு.கண்ணன் அவர்களே படித்துக்காட்டி உதவிசெய்தார். பார்வையற் றோர் உரிமைக்காக நடைபெற்ற பல போராட்டங்களின் முன்னின்றார்.

திரு. கண்ணன் அவர்களின் விருப்பத்திற்கேற்ப, அவரது உடல் மருத்துவ மாணவர்களின் ஆய்வுக்காக கொடையாக வழங்கப்பட்டது. திரு. ச.சீ. கண்ணன் அவர்களது மறைவுக்கு, தமிழ்த்தேசியப் பேரியக்கமும், தமிழர் கண்ணோட்டமும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது!

Registered with registrar of news papers for RNI No. TN TAM / 2009 / 28475
Regd. No TN / CC / (S) DN / 478 / 16 -18 WPP License No. TN / PMG (CCR) / WPP - 239 / 16 -18
Date of Publication 1st & 16 th of every month

# இனியும் பொறுக்க முடியுமா?

# ஏழுநாள் இரயில் மறியலுக்கு வாருங்கள்!

## 15.5.2017 முதல் 21.5.2017 வரை

குடிக்கத் தண்ணீர் இல்லை; குளிப்பதற்குத் தண்ணீர் ஏது? தமிழ் மக்கள் தவியாய்த் தவிக்கிறார்கள்.

சென்னையிலிருந்து இராமேசுவரம் தீவு வரை 20 மாவட்டங்களுக்குக் குடிநீர் வழங்கி வந்த
காவிரி நீரைக் கன்னட அரசும் மோடி அரசும் தடுத்துவிட்டன.
காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.
அதை முரட்டுத்தனமாக மறுத்து தமிழர்களுக்கு எதிராக இனப்பாகுபாடு அரசியல் நடத்துகிறது மோடி அரசு!

தமிழர்களின் உரிமைகளைச் சட்ட விரோதமாகப் பறிக்கும் மோடி அரசைத் தட்டிக் கேட்டு,
வறட்சிக் காலத்தில் மக்களைப் பாதுகாக்க வேண்டிய தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள்
தன்னல அரசியல் நடத்தி, நடுவண் அரசுக்கு மண்டியிட்டு, இனத்துரோகம் செய்கிறார்கள்.
வறட்சியால் உழவர்கள் சாகவில்லை என்று உச்ச நீதிமன்றத்தில்
தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள் மனுப் போட்டுள்ளார்கள். இது நீதியா?

இனி, போராடாமல் வாழ்வில்லை! ஏழு நாள் இரயில் மறியல் போராட்டம்! திருச்சி, தஞ்சை, திருவாரூர்,
நாகை, கடலூர் மாவட்டங்களில்! அங்கங்கே ஆயிரம் பல்லாயிரமாய் ஆண்களும் பெண்களும்
இரயில் பாதையில் குவிய வேண்டும்!

**ஒற்றைத் தீர்ப்பாயத்தைத் திரும்பப் பெறு! காவிரி மேலாண்மை வாரியம் உடனே அமைத்திடு!
கடன் தள்ளுபடி செய்! முழு வறட்சி நிவாரணம் தேவை! பெட்ரோலியம், எரிவளி, நிலக்கரி
காவிரி சமவெளியில் எடுக்காதே என்று முழங்குவோம்! வாருங்கள் தமிழர்களே!**

**பெ. மணியரசன்**
ஒருங்கிணைப்பாளர், காவிரி உரிமை மீட்புக் குழு.
*பேச: 94432 74002 | முகநூல்: KaveriUrimai | #SaveMotherCauvery*

